சிவமயம்.

வேளாளன்

தூத்துக்குடி.

"மேழிச் செல்வம் கோழை படாது" ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு.

வயது 2 } 1105-ம் ளு பிரமோதூத ஸு வைகாசி & ஆனிமீ 26உ { மாதம் 2, 3

" அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

அன்பர்களுக்கு அறிவிப்பு.

அன்பர்களே! இன்று வெளியாயிருக்கிற 'வேளாளன்' வைகாசிக்கும் ஆனிக்கும் உரிய இரு இதழ்களாகும். வைகாசி மாதம் பத்திராசிரியரின் சகோதரனுக்குக் கலியாணம் நடந்ததாலும் பத்திராசிரியர் பல ஊர் சென்றிருந்ததாலும் வைகாசி விசாகத்தின் பொருட்டு மூன்று நாள் அச்சுக்கூடம் அடைத்திருந்ததாலும் வைகாசி மாதம் பௌரணமிக்குத் தனி இதழ் வெளியிட முடியாமற் போயிற்று. அன்பர்கள் பொருப்பார்களாக.

சந்தா நேயர்கள் சந்தாவை இவ்வருடமாவது பின் தருவதை முன் தந்து உதவும்படி வேண்டுகின்றேன். வி- பி. யில் அனுப்புதல் வீண் செலவாகும்; ஆதலால் மணியார்டரிலேயே அனுப்ப வேண்டுகின்றேன். சென்ற வருடச் சந்தாப் பாக்கியுள்ளவர்கள் இவ்வருடத்துச் சந்தாவையும் சேர்த்து அனுப்பும்படி வேண்டுகின்றேன்.

மானேஜர்.

பணமும் மனமும்.

பணம் யென்பது பொருட் செல்வம். பொருட் செல்வம் இன்றேல் பூவுலக வாழ்க்கை இல்லை. பணமில்லாத மக்கள் நடை பிணங்களுக்கொப்பர். ஆதலால் பொருளைப் போற்றி வாழவேண்டும் "பொருளில்லாருக் கிவ்வுலகில்லை" "பொருள்தனைப் போற்றி வாழ்" என எழுந்துள்ள வாக்குக்களும் இதுபற்றியேயாம். பூர்வ புண்ணிய வசத்தால்ப் பெற்ற பொருளை அறநெறியில் செலவிட்டுப் புண்ணியமும் புகழும் பெற்று வாழவேண்டும். உற்றார் உறவினர்கட்கு உதவி செய்தல் வேண்டும். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற முதுமொழியும் ஈண்டு எண்ணுதற்குரியது. பொருள் பெற்று வாழும் மக்கள் ஊர் நடுவே நீர் நிறைந்த ஊருணி போன்றும் பயனுடைப் பழந்தரும் மரம் போன்றும் பிற மக்களுக்குப் பயனுடைத்தாய் வாழவேண்டும். இம்முறையால் வாழ்வு நடாத்தும் மக்களின் வாழ்வு செம்மை பெறுவதோடு புண்ணியமும் புகழும் பொலியப் பெற்று பொருட் குவியலும் குறைதலின்றி கூடிக்கொண்டு வளரும். இவ்வுண்மையை யுணராத பணக்கார மக்கள் பலர் சென்னெறியில் செலவிட்டால்ச் செல்வம் சீர்கெட்டுச் சிதறிவிடுமென் றெண்ணியோ அன்றி பிற பல வெண்ணியோ சென்னெறியில்ச் செல்வத்தைச் செலவிடாது புன்னெறி பல புகுந்து பொருளை வாரி இறைத்து விரையமாக்கி இம்மையில் இகழும் மறுமையில் மருளும் பெற்று மயங்குவதோடு பணத்தையும் இழந்து பரிதவிப்பர். இவ்வுண்மையை யுணராத மக்களின் நிலை குறித்து நாம் வருந்துகின்றேமில்லை.

இவ்வுண்மைகளை இன்னுந் தெளிவாகக் கற்றுணர்ந்து கேட்டுணர்ந்து மாறுபட்டு நடக்கும் மக்களின் நிலை குறித்தே நாம் பெரிதும் இறங்குகின்றேம். அந்தோ பணம் பெற்றார் பலர் ஆணவத்தால் அகந்தையால் உற்றார் உறவினர் ஊரார் உலகத்தார் ஒருவரையும் ஓம்பாமல் இறுமாந்திருந்து இவ்வுலக வாழ்வு நடாத்துகின்றனர். இன்னவர் நிலை இருந்தவாறு என்னே! அந்தோ! நன்னெறியில் செலவிடல் நலமென நவில்கின்றனர். புன்னெறியில் செலவிடல் இன்னல் பல விளையுமென இயம்புகின்றனர்.

ஆனல் பணமென்றால் மனம் ஒருப்படுகின்றதில்லையே என்கின்றனர். உலகில் ஓம்பப்படும் பொருள் பலவற்றுள்ளும் உயிரே உயர்ந்ததாகும். உயிரினும் ஒழுக்கமே உயர்வென ஓம்பப்படுவதாகும். இஃது அறிஞர் அறைந்த அறவுரை. ஆனல் உலகியலில் பெரும்பகுதியும் ஒழுக்கத்தினும் உயிரினும் உயர்ந்தது பொருட்செல்வமெனக் கருதப்படுகின்றது. உயிரை இழந்தாலும் ஒழுக்கத்தை இழக்கலாகா தென்பது முற்கால தமிழ்மக்கள் இந்திய மக்கள் வாழ்க்கையி னனுபவத்திலிருந்தது. தற்கால மக்கள் வாழ்க்கையிலோ ஒழுக்கத்தை இழந்தும் உயிரை இழந்தும் பொருளைப் போகவிடாது போற்றி வாழ்கின்றனர். "கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மீது காதல்" என்பதை மாற்றிப் பொருள்மீது காதலெனக் கொள்ளுங் காலமிதுவெனக் கூறலாம். ஏனென்றால் மக்களையும் மறந்துவிடுகின்றனர் மனைவியையும் மறந்துவிடுகின்றனர். பணத்தையோ மனத்திடை மறவாது மனனஞ் செய்கின்றனரென்றால் மிகையாகாது. அரிய நண்பர்களாய்த் தேனெழுகும் வார்த்தைகளால் தித்திக்கப் பேசுவர். கடனுக்குக் கால் ரூபாயென்றால் காதவழி ஓடுவர். தாயானாலும் தந்தையானாலும் பிள்ளையானாலும் உடன்பிறந்தாரானாலும் ஒருவருக்கொருவர் பணமென்றால் பாய்ந்தோடுவர். இன்னலுற்றால் இறங்குவர். இறந்தால் அழுவர். செல்வத்தால்ச் செழிய நிலையிலிருந்தால் கூடியாடிக் குலாவுவர், உண்ணுவர், உறவாடுவர், உற்றாரென உரைப்பர். இந்நிலையான மக்கள் கூட்டத்தின் மனநிலையையும் பணநிலையையும் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் எம்முள்ளம் இறங்குகின்றது. செல்வம் சென்றுகொண்டிருக்கும்; நிலைபெற்று நிற்பதில்லை; பொருள் பெறுவது புண்ணிய வசத்தால் என்பதனை அநுபவத்தால் அறிந்து பணத்திற்கென வேறு மனம் படையாமல் ஈந்து இன்புற்று வாழ விரும்புகின்றோம்.

குறிப்புகள்.

வெற்றிபெற்று விளங்குபவர்: குலசை திரு. C. R. இராமனுஜ பிள்ளையவர்கள்பேரில் ஏற்பட்டிருந்த கிரிமினல் கேஸுகளெல்லாம்

தள்ளுபடி செய்யப்பட்டதாய் அறிகிறோம். பிள்ளையவர்கள் தயாள சிந்தையுடையவர். யாருக்கும் தம்மாலான உதவி செய்பவர். பிள்ளையவர்களின் மன நலத்தால் "தர்மம் தலை காக்கும்" என்பதற்கொப்ப மிக ஆபத்தான கேசுகளினின்று விடுதலை பெற்று விளங்குகின்றார். பிள்ளையவர்கள் விடுதலை குறித்து நாம் அக மகிழ்கின்றோம்.

குமர குருபர சுவாமிகளின் குருபூசை:—திருபனந்தாள் ஆதீன கர்த்தர் குமர குருபர சுவாமிகளின் குருபூசை சென்ற வைகாசிமீ 2உ வியாழக்கிழமையன்று திருப்பனந்தாளில் வெகு விமரிசையாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான பரதேசிகளுக்கு அறுசுவை உணவும், உடையும் அளிக்கப்பெற்றது. பிராமணர்களுக்கும் சைவர்களுக்கும் வித்வ சிரோன்மணிகளுக்கும் தகுதிக்கேற்ற சன்மானம் வழங்கப்பெற்றது. வந்த ஏழைகளுக்கெல்லாம் அறுசுவை யுணவும் ஆடையும் இல்லையென்னாது ஈந்த பெருமை இவ்வாதீனத்திற்கே ஏற்றாகும். குருபூசையைத் திறமையுடன் நடத்திய பெருமை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளுக்கே உரிமையுடையது. சுவாமிகளின் திறமையைக் கண்டோர் அனைவரும் களிப்புராமலிரார். சுவாமிகள் பல்லாண்டு வாழ்க.

மகா சந்நிதானத்தின் மனக்கவலை:—திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த திருவீழிமிழலை ஆலயத்தில் நடைபெற்ற சித்திரைத் திருநாளில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் பெருமான ஆதீன ஆபரணங்கள் களவு போயினவாம். ஆபரணங்கள் மறைந்த மாயம் ஆண்டவனே ஆச்சரியப்படத்தக்கது. உட்களவாகவே இருக்கவேணுமென்று ஊகிக்கப்படுகிறதாம். நகைகள் மிகவும் உயர்ந்த கற்களால் திறமையான வேலைப்பாடுகளோடு கூடியதாம். தர்மச்சொத்து தமது காலத்தில் மாயமாய் மறைந்ததை நினைந்து மனக்கவலை கொண்டிருக்கும் மஹா சந்நிதானத்தின் வயோதிகப் பருவத்தின் வருத்தம் குறித்து நாம் பெரிதும் வருந்துவதோடு எல்லாம் வல்ல இறைவன் ஆதீன கர்த்தாவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டுகின்றோம்.

பெருமை துலக்குவது கருமமே

(திரு. வா. ராமலிங்கம் பிள்ளை அவர்கள், எழுதுவது.)

பெருமையென்பது அமைப்பாலோ, குணத்தாலோ, செய்கையாலோ விசேடித்த தன்மை. அதாவது பெருந்தன்மை பொருந்தப் பெறுவதாம். இத்தகைய பெரிய தன்மையானது ஒவ்வொரு முறையில் வெவ்வேறாக அமைந்து கிடப்பினும் அவ்வவ்வற்றிக்கு அந்த அந்த முறையில் பெருமையுடையதென்றே கூறப்படும்,

நம்மில் அழகுறு அமைப்பால், அன்புறு குணத்தால், அரும்பெருஞ்செய்கையால் பெருமையுடையார் பலர். இதில் அமைப்பால், குணத்தால், பெருமையுடையார் மிக அருகிய தொகையினரேயாகும். அன்றியும் அவர்களின் பெருமை அவனியில் பரவுதலும் அரிதே. ஆனால் அரும்பெருஞ் செய்கையால் பெருமை பெற்றார் எக்காலத்தும் எவராலும் போற்றப்பெறுவர் என்பது திண்ணம். ஒருவர் சிறந்த ஓவியம் எழுதும் அல்லது சிலையுருவமமைக்குந் திறமுடையராயின் ஓவியப்புலவர் அல்லது சிற்பி என்றும் இனியகவி யமைக்குந்திறம்பெறில் கவிவாணர் அல்லது புலவர் என்றும் வறியார்க்கு வரையாது கொடுத்தலால் வள்ளல் என்றும் அந்த அந்த முறை பற்றி பெருமை பாராட்டப் படுகின்றனர். நிற்க.

ஒரு நாட்டினர் வழங்கிவரும் ஒரு மொழியின் பெருமையை உணரவேண்டில் அம்மொழியமைப்பின் விசேடம், பொருள் விசேடம், உரைப்பதிலும், ஓதுவதிலும் இனிமையுடைமை, இவ் வினிய தன்மையால் அதைப் போற்றினோர் பெற்றபயன், அப் பயனுக்குக்காரணமாகநிகழ்ந்த அருஞ்செயல்களாதியகொண்டே உணரலாகும். இம்முறையில் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழி எல்லா வகையாலும் ஒல்காப்பெரும் புகழுடையதாகும். எம்மொழியிலுமில்லாததோர் இனிமைத் தன்மை இம்மொழியி லுண்டென்பதை முறைபட உணர்ந்தார் யாரும் முற்றும் ஒப்பு

வர். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங்காணோம்" என்று இக்காலத்து யாவரும் போற்றும் தேசியப்பற்று மிக்க பாரதியாரும் நந்தமிழ் மொழியின் அந்தமில் இனிமையை எடுத்துரைத்தமைகாண்க. இவ்வினிய மொழியில் புலமைபெற்றிலகிய கம்பர், ஔவையார், இரட்டையர் போன் றோர் செய்துள்ள அருஞ்செயல்கள் பல. அன்றி அருளவதார மூர்த்திகளாய் விளங்கிய பெரியார்கள் செய்த அரும்பெரும் அற்புதங்கள் அளவில.

இவ்வாறாக நந்தமிழ்ப் பெரியார்கள் பல அற்புதங்கள் செய் தமைக்கு மொழி எவ்வாற்றானும் காரணமாகாதென்றும் பின் னும் பலவிதமாகவும் திருவாளர். பொ திருகூடசுந்தரம் பிள்ளை யவர்கள், "தமிழ் மொழியின் பெருமை" என்ற தலைப்பில் ஆனந்தபோதினி மாத வெளியீட்டில் பல பல எழுதியுள்ளார் கள். அவற்றுள் பல பொருந்தாதனவாயுளவேனும் "அற்புதங் கள் நிகழ்ந்தமைபற்றி மொழிக்குப்பெருமை ஏற்படாது" என் றது முற்றும் ஒவ்வாததாகக் காணப்படுகின்றது.

ஒருவர் செயற்கரும் அற்புதஞ் செய்யவேண்டுமேல் அவரி டம் பிறயாவரினும் உயர்ந்ததோர் உள்ள நெகிழ்ச்சி யமைதல் வேண்டும். அற்புதங்கள் செய்யவல்ல உள்ள நெகிழ்ச்சியமைய வேண்டுமேல் தெள்ளிய தெய்வபக்தியால் திகழும் அருள் வேண் டும். தெய்வபக்திக்கும் அருளுக்கும் வேண்டுவது தூய ஒழுக்கமா கும். தூய ஒழுக்கமுடைமைக்கும் அதன் வழி வழுவாது நிற்றற் கும் அவர் ஆராய்ந்தநூலும் அந்நூலமைந்த அரும்மொழிப்பான் மையும் கருத்துமே காரணமாகும். "நூலளவேயாகுமாம் நுண் ணறிவு" என்பதும் ஆன்றோர்வாக்கல்லவா? இம்முறையில் நம்தமிழ் மொழியானது மிகுந்த ஆன்மஞானமும் சிறந்த தெய்வசிந்தனையும் அளிக்கவல்லதாகும். இயற்கையமைப்பிலேயே இம் மொழி மிகச் சிறப்புடையது என்பதும் கவனிக்கத்தக்கது. என்னெனில் எல்லா எழுத்துக்களும் அகரத்தை முதலாகவுடையதேனும் நந் தமிழில் இதர எழுத்துக்களிற்போல, எ; ஒ; ஆ; எனத் திரிந்த

ஓசை எதுவுமன்றி இயற்கையாக அதாவது பிறந்த குழந்தையும் உதடுகள் பொருந்தியுள்ள. தன் வாயைத் திறக்குங்கால் ஏற்படத் தக்க முறையில் 'அ' என அமைந்துள்ளது. அல்லாமலும் ஆடு, மாடு, ஆகிய மிருகங்கள்கூட "அம்மா" என்று தொனியின் முத லிலும் ஈற்றிலும் 'அ' தொனிக்கும்படி ஓசையிடுவது உற்றுணரத் தக்கது. இவ்வாறு நந் தமிழ் மொழியில் இயற்கைக்கு ஒத்த, பல விசேடமாய் அமைந்துகிடப்பது ஒன்றி ஆய்ந்தால் உணர லாகும். எனவே இம் மொழி முறைபயின்றுணர்ந்தடங்கியார் தூய்மை, ஒழுக்கம், அன்பு, அருள், பெற்று அற்புதங்கள் நிகழ்த் துவதில் ஐயமென்ன? மொழி நூல் வழி நின்றார்க்கே அருஞ் செயல்கள் செய்தல் எளிதென்றால் அருளவதார மூர்த்திகள் அற் புதங்கள் செய்தமை நம் சமயமும், மொழியும், நாடும் முன்னேற் றமடைதற்கு எடுத்துக்காட்டாகவே அமைந்தனவன்றோ? இம் முறையில் தமிழ் மொழிக்கு அம் மொழியுடைப் பெரியார் செய்த அற்புதங்களால் பெருமையில்லை என்பது எவ்வாறு பொருந்தும்? மொழிப் பெருமைக்கு மொழியுடையார் கருமம் அதாவது அருஞ் செய்கையே தக்க ஆதாரவாகும் தன் மொழியின் பெருமை பேசக் கூசுவோர் தன்னாட்டில் பற்றுடையாதல் எங்ஙனம்?

இன்னும் கருமத்தாலேயே பெருமை துலங்குமென்பதற்கு திரு. பொ. தி. பிள்ளையவர்களையே உதாரணங்கொள்ள இடமுளது. பிள்ளையவர்கள் சுதாபிமானி, என்றும் தேசபக்தர், என்றும் பெயர் பெற்றமையும் பின் நாத்திகக் குழுவினர் என்று நவில்பட்டமை யும் எதனால்? அவர்கள் கற்றுணர்ந்த ஆங்கில நூல்களில் திகழும் நாட்டுப்பற்று (Patriotism) கொண்டு சுதர்பற்றியும், தேசம்பற்றி யும் பேசியும் எழுதியும் வந்த செய்கையாலா? அல்லது அவர்கள் பெயர் சுந்தரமாக அமைந்தமையாலா? நாத்திகக்குழுவினர் எனப்பட்டமை அவர்கள், சமய சம்மந்தமான ஆராச்சிச்சபை களில், சமயப்பற்றின்றி முரண்பட்ட கேள்விகள் கேட்டமையா லும் அவ்வாறு எழுதினமையாலுமாகிய செய்கையாலல்லவா? நாத்திகரோடு சேர்த்துரைக்கப்படவே பிள்ளையவர்கள் தான் நாத் திகக் குழுவைச் சேரவில்லை யென்றும் தனது உண்மையான சமய

மரியாதை நோக்கமும் கருத்தும் இத்தகையதென்றும் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுக்கொள்ளவில்லையா?

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பதன்றோ பொய்யா மொழி? இவற்றையெல்லாம் சிந்தியாது பிள்ளையவர்கள் "தமிழ் மொழியின் பெருமை" என்ற தலைப்பிட்டு அதற்குப் பெருமை யின்றெனப் பேச முற்பட்டது பொருத்த மற்றதேயாகும்.

இன்னும் தமிழ்மொழி தெய்வீக மானதல்ல வென்றும் மனிதர்களால் அவ்வப்போது விருத்தி செய்துகொள்ளப்பட்டதே என்றும் அவர்கள் கூறுகிறார்கள். "இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன்கோவில்" என்ற முறையில் எவ்வுடலால் எவ்வுயிரால் செய்யப்படும் செய்கைதான் தெய்வீகமானதல்ல? எல்லாவற்றையும் இயக்குவது தெய்வம் ஒன்றே. பிள்ளையவர்களை அவ்வாறு எழுதச் செய்ததும் என்னை சிற்றுரை விடுக்கச் செய்ததுமே அவர்கள்பாலும் என்பாலும் அமைந்து கிடக்கும் கடவுள் அணுவின் காரணமன்றோ?

உலக நிகழ்ச்சியனைத்தும் கடவுளாலாவதே எனினும் ஒன்றின்பால் தெய்வத்தன்மை மிகுந்தும் மற்றொன்றின்பால் குறைந்தும் காணப்படுகிறதன்றோ? அன்றி ஓர் சித்திரக்காரன் ஒரேவிதமான பலவுருவங்கள் எழுதினும் ஒன்றின்பாலுள்ள வனப்பு மற்றதன்பால் அமைவதில்லையல்லவா? மனிதர்கள் எல்லாம் கடவுளாலேயே படைக்கப்பெற்றாலும் ஒருவருடைய உருவத் தோற்றம், குணம், செய்கை, மற்றவர்பால் காணப்படாததுபோல எல்லா மொழிகளும் தெய்வத் தன்மை கூடியே ஆக்கப்படினும் ஏனையவற்றிலும் தமிழ் மொழியின் தெய்வீகத் தன்மை மிக்கதென்பதும் இவ்வொரு தன்மையாலேயே கூசாது தெய்வீக மொழியெனக் கூறலாம் என்பதும் யுத்திக்கு ஒத்ததேயாகும். இன்னும் நுணுகி ஆராய்ந்தார், பல ஏற்ற காரணங்கள் காட்டவுங் கூடும்.

கடவுளுக்கு அரைகுறையான முழுதும் வளராத மொழியினிடத்தேதான் அன்புண்டென்றும், முழுதும் வளர்ந்து இளமை மாறாதிருக்கும் தமிழினிடத்து அன்புண்டெனல் பொருந்தாதென்றும் "குழலினிதுயாழினிது" என்ற திருக்குறளை மேற்கோளாகக்கூறியுள்ளார்கள். அறியாப்பருவமுள்ள குழந்தைகளின் மழலைமொழியைக் கேட்டுப் பெற்றோரின்புறுவ தன்றிப் பருவம் எய்தும் மக்களின் தவறுதலும் குழறுதலுமான மொழியைக் கண்டிக்காது போற்றுவரோ? தந்தை கடவுளும்; மைந்தர் மொழிகளுமானால் "தம்மிற்றம் மக்களறிவுடைமை, மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாமினிது" என்றும் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்றுங் குறளில் கூறிய வண்ணம் நிறைவடைந்து அறிவுக்கறிவும் அமிழ்துக்கமிழ்துமாய்த் திகழும் தமிழ் மொழியில் பேரன்பு கடவுளுக்கிருக்கக்கூடுமெனல் ஏன் பொருந்ாது?

எத்தாலுந் தமிழ் மொழி மெத்த புகழும் பெருமையும் உடையது எனக் கொள்வதே ஏற்றதாகும்.

ஆற்றூர் பென்ஷன் தாலுகா சிரஸ்தாதார் கௌமாரபக்தி,

A. T. இராமலிங்கம் பிள்ளை அவர்களியற்றிய,

திருச்செந்தூர் தண்டகமாலை.

(முன் தொடர்ச்சி)

மறுத்தொருவர் மாதேநீ மால்மருகன் பாதம்
வெறுத்துறைநி யென்றால் வெகுள்வாள்—பொறுத்திருப்பா
ளெத்தனைநாட் செந்தூ ரிறைவாநான் சொல்வதிவ
ணைத்தனையு மெய்யென் றறி. (26)

அறிவேது மில்லாளுள் ளன்பிலாள் மிக்க
மறுவே நிறைந்த மனத்தாள்—கறுவுகின்ற
சிந்தனையா ளென்றாலுஞ் செந்தூரா னென்பார்க்கும்
வந்தனையே செய்வாள் மருண்டு. (27)

மருண்டாவ தென்கொலோ மாதேயுள் ளன்பு
திரண்டா லொழியவந்து சேரான்—முரண்டாதே
யென்றாலுங் கேளா னிறைவாசெந் தூர்முருகா
வென்றாலும் போதுமென்பா னெற்கு. (28)

எனக்குரிய வாவிபொரு ளிவ்வுடலுன் பாதந்
தனக்கே திறையாகத் தந்து—மனக்கவலை
யென்றுதா னீங்கி யிருப்பேன்செந் தூரலாற்
குன்றுதோ றாடுங் குகா. (29)

குகனேமெய்த் தெய்வமவன் கூர்வடிவே னெஞ்சே
பகடேறு மந்தகனார் பண்ணு—மிகறடிய
வுற்ற துணையா முவனுறை செந்தூரே
நற்றவர்க்கு வாழுகின்ற நாடு. (30)

நாடுசெல்வங் கல்விமுதல் ஞானமெலா நெஞ்சேநீ
தேடியெங்குஞ் சென்றாலுஞ் சேராவாம்—பாடியே
செந்தினகர்த் தேவன் றிருவடியைச் சிந்திக்கில்
வந்துவிடு மெல்லா மலிந்து. (31)

மலிந்தமட மாதர்தம் வாழ்க்கையிலே சிக்கி
மெலிந்துழலு நெஞ்சேசும் வேலன்—பொலிந்துவளர்
செந்தூரைச் சேர்வார்க்குத் தீராத வல்வினையுஞ்
செந்தூளாய்ப் போகுமாந் தேர். (32)

தேரோடும் வீதியிலே செந்தூரான் றந்தனிலே
யாரோடு சென்றிங் கறைகுவேன்—பாருடே
வந்தமுத லென்னுடனே வாழுமட நெஞ்சேநீ
யெந்தவித மோர்ந்தாய்சொ லெற்கு. (33)

என்னைவிட நிற்கு மிதஞ்சொலுவா ரிங்குமிலை
யுன்னைவிட நற்றுணையெற் கொன்றுமிலை—சொன்னபடி
யெப்பொழுது நெஞ்சே யிருப்பாயேற் செந்தூரா
னெப்படியுஞ் சேர்வா னெமை. (34)

எமைப்புரக்குஞ் செந்திநக ரீசனருட் டொண்டர்
தமைப்பாவுந் தூநெறியே சார்வா—யிமைப்பொழுதும்

பதநயலார் சங்கத்தைப் பாராதே மேலாகும்
முத்தியிலே நெஞ்சே முயல். (35)

முயன்று தவமாற்ற முன்னுகூ ழின்றே
வியன்றவள விற்குகனை யேத்திப்—பயின்று
வருவாயே னெஞ்சே மனையமுஞ் செந்தூர்ப்
பெருவாழ்வுங் கிட்டுமே பின். (36)

பின்னுசடைத் தொங்கல் பிறங்க விளம்பால்வாய்
மன்னுசிறு பிள்ளையாய் வந்தருளித்—தென்னவன்றன்
வெங்நோய் தணித்த விமலனே செந்திநக
ரெங்நோய்தீர்த் தாளு மிறை. (37)

இறையளவும் பத்தியிலா வேழைமட நெஞ்சே
குறையுனக்கென் வைத்தான் குமரன்—நறைமலர்த்தா
ளெண்ணுதே கெட்டா யெடுத்தெடுத்துச் சொல்லிமிகப்
புண்ணுனேன் செந்தூர்க்குப் போ. (38)

போதமிலா நெஞ்சே நீ புன்மையர் பாலும்
வாதுக்கேன் சென்றுயிரை மாய்க்கிருய்—நாதனருள்
கூடு வகைதேர் குறிப்புடனே யுண்ணினையாய்
வீடருளுஞ் செந்தூரான் வேல். (39)

வேலுண்டு காக்க விரைமலர்ப்பொற் றண்டையார
காலுண்டு நோக்கக் கரியநிற—மாலுண்ட
பூவிலே செந்தூர்ப் பொருப்புறை வேணுமம்
நாவிலே யுண்டா நமக்கு. (40)

நமராவார் கூர்வடிவே லுதனுக்கு நெஞ்சே
தமராவார் யாவவர் தாமே—யமரா
புரியெமக்குச் செந்தூரே போகமவற் காற்றுஞ்
சரியைமுத லன்குமே தாம். (41)

தாதாவாம் பாவலர்க்குத் தாயிலாச் சேய்களுக்கோ
மாதாவா மன்னுயிர்கள் மற்றெவைக்கு—நாதாவாம்
விந்தவரை மேட்டிமையை வென்றவற்கு நெஞ்சேநஞ்
சந்தவரை யான்குருவாஞ் சாற்று. (42)

சாற்றரிய பாவலர்க ளுந்தபல நூல்களினு
மாற்றுப் படையே யதிகமெனச்—சாற்றியவன்
றன்னுயிர்போற் செந்திநகர்ச் சண்முகவே ணெஞ்சேநம்
மின்னுயிருங் காப்பா னினிது. (43)

இனியசூாற் செவ்வா யிழையார்பான் மோகங்
கனியுமட நெஞ்சேநான் கட்ட—மினியேனு
மில்லா திருக்க விடந்தேடிற் செந்திநக
ரல்லால்வே றுண்டோ வரண். (44)

அருவமா யெங்கு மகன்றொளிருஞ் சோதி
யுருவத்தி னுள்ளாக வுற்றல்—திருவருளாற்
காட்டுபவன் செந்தூர்நங் கந்தனலா னெஞ்சேவிந்
நாட்டிலெவர் செய்வார் நமக்கு. (45)

நமையாளுஞ் சீரலைவாய் நாத னடியா
ரெமனேவா வென்றாலு மேகான்—குமாரவா
வென்றேனுஞ் சொல்லாதா ரிந்நோடிபோய்ப் பின்வாநீ
வென்றாலுஞ் செல்லா னெமன். (46)

எமனுக்கோர் நாமமென விந்நிலத்து நூல்கள்
சமனென்று சொல்லுவதுந் தப்பே—சமனென்றாற்
சந்த வரையான் றனதடியார்க் கோர்விதமுஞ்
சொந்தமிலார்க் கொன்றுமோ தூக்கு (47)

தூக்கியநேர்ந் திட்டார் தொடைமேற் றொடையிட்டேன்
தேக்குமோ நின்றனக்குச் செந்தூரா—வாக்குமனங்
காயமெனு மூன்று கரணசுத்தி யாகவுனை
யாயவல்லே னெப்போ வருள். (48)

அருளுக்கா முள்ள மதைமனமே கால்போன்
மருளுக்கே நின்றலைத்து மாய்த்தாய்—தெருளுடையா
ருற்றுறையுஞ் செந்தூ ருமைகுமரன் பாதமலர்ப்
பற்றுறுத லெப்போ பகர் (49)

பகுத்தறிவு சற்றுமின்றிப் பாமரமே நாளு
மிகுத்துழலு நெஞ்சேநின் வேக—முகுத்த
வரிதோரஞ் செந்திநக ரண்ணலரு ளேக்காற்
பரிதிவழி க்ரவோட்டிப் பார்த்து. (50)

வேளாளர் நிலைமை.

திரு. இ. வெண்ணிமாலை பிள்ளையவர்கள், B. A., B. L.,

(முன் தொடர்ச்சி)

ஆனல் வேளாண்மை செய்யும் நம் மரபினரோ அநேகமாய் வறியர்களாகவே யிருக்கின்றனர். நிலம் வைத்திருப்பவர்களில் பெரும்பாலர் பின் வருவாயை நம்பி முன் தனம்போட்டு வேலை செய்யக்கூடிய பொருள் நிலையிலுள்ளவர்களாயில்லை. சுவரை வைத்துச் சித்திரம் என்னும் பழமொழிக்கேற்ப பொருள் நிலையை வைத்துத்தான் புதிய முறைகளனுட்டானம், எனவே புதியமுறைகளை யனுட்டிப்பதற்கு வேண்டும் பணத்துக்கு வழிகள் தேட வேண்டும். வழிகளுளவா?

வழிகள் உண்டு. கடீன் கொடுக்க கிராமந் தவறாது காத்திருக்கும் அநியாய வட்டிக்காரச் செட்டிப் பிரபுக்கள் கடைகளில் தகை வட்டிக் கெடுப்பதும் ஒரு வழிதான். ஆனல் அவ்வித வழிகளை நாம் இங்கு கூற வரவில்லை. அவைகளும் வழிகளா? சுழிகளன்றோ! என்னை முடிவையடைய சாதகமா யிருப்பவை வழிகள். முடிவை நாடி நீந்துவதில் முப்பது வட்டி நாற்பது வட்டியென முடிச்சுகள்போட்டு பாதையைப் பின்னலாக்கி இயற்கெனவே தயங்கும் உழவனை வட்டி யென்னும் சுழி முனையில் இழுத்து அமிழ்த்துந் தகையவாய வட்டிக்கடைக் கடன் வழியை சுழி என்னாது வழி யென்றால் பொருந்துமா?

செட்டியிடம் கடன்படுபவன் மட்டி. அவனுல் செட்டிக்கு வட்டியையே அடைக்க முடியாது போய்விடுவது யாருமறிந்த அநுபவம். எனவே செட்டியிடம் வட்டிக்குக் கடன் வாங்கும் வழியை நாம் கனவிலும் கருதவேண்டியதில்லை.

கடனே கட்டாயம் வாங்கவேண்டிய திருக்கிறது. குடியானவனுக்கு வேண்டுவதெல்லாம் கடனை இலகுவான வழியில் அடைத்துவிட சாதகங்களிருக்கவேண்டும். வட்டியும் சொற்பமாயிருக்கவேண்டும். இவ்விரண்டு சாதகங்களுமிருக்கும் வழிகளே நாம் இச்சமயம் கவனிக்கற் பாலாது.

அத்தகைய வழி யொன்றை அரசாங்கத்தாரே நமக்கு ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலமாய் வெகு பிரயாசை யெடுத்துக் காட்டுகிறார்கள். அச்சங்கங்கள் ஏழை மக்களுக்குச் செய்யும் நன்மை அளவிடற் பாலது.

திக்கற்ற குடியானவர்களுக்கு ஐக்கிய நாணயச் சங்கத் தெய்வபக்தி வறுமை வாய்ப்பட்டு உய்வும் வழியுளதோவென ஏங்கும் விவசாயிகளுக்கு ஆழிவாய்ப்பட்டு அயரு முள்ளத்தோருக்கு அருகில்வந்து அடைக்கலமளிக்கும் மாக்கலம்போல் கொடுத்துதவி அவர்களை வறுமைப் பிணியினின்றும் மீட்டுவது கூட்டுறவு நாணயக் கூட்டங்களே. இக்கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டதின் பலனைய் மேனாட்டு விவசாயிகளின் பொருளாதார நிலைமை வெகு சீக்கிரத்தில் ஓங்கி வளர்ச்சியடைந்திருக்கிறதை சரித்திரம் மூலமாயறிகிறோம். சென்ற அறுபது எழுபது வருடங்களுக்குமுன் அங்குள்ள அநேக விவசாயிகளின் நிலைமையும் நம்மனோரை யொத்தேயிருந்தது. ஆனால் ஐக்கிய நாணயக் கூட்டம் போன்ற கூட்டுறவு இயக்கங்கள் அந்நாட்டில் ஆங்காங்கே பரவி நிலைக்க ஆரம்பித்ததும் அந்நாட்டு விவசாயிகளின் நிலைமையும் சீருக்கு வர ஆரம்பித்தது.

இவ்வளவு உபயோகமுள்ள இக்கூட்டுறவு இயக்கங்களை உழவர்கள் ஊர் ஊராய் ஆரம்பித்து ஒழுங்கே நடத்தவேண்டும். அவைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தாரே போதிய உதவிகள் செய்கிறார்கள். அதற்கெனவே கூட்டுறவுப்பிரிவு என்று அரசாங்க முறையில் ஒரு பகுதியும் ஏற்படுத்தி அவ்வியக்கத்தைப் பரப்புவதற்கென்றே பிரசாரகர்களையும் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவுக் கூட்டு லாபகரமான வழியில் நடப்பதற்குத் தகுந்த வழிகளை அவர்களிடம் கேட்டுக்கொள்ளலாம்.

கூட்டுறவு நாணயச் சங்கங்களில் உழவர்கள் பங்குகள் எடுத்து அவைகளைக் கொண்டு நடத்துவதால் அவர்களுக்கு இரு வகையில் ஊதியமிருக்கிறது. நாணயக் கொடுக்கல் வாங்கலில் பங்காளிகளுக்குக் கிடைக்கும் ஊதியமொன்று; பங்காளிகளுக்

குக கடன் வேண்டுமானல் சொற்ப வட்டிக்குக் கிடைப்பதனு லவர்களுக்குக் கிடைக்கும் வட்டி மிச்சம். மற்றொன்று ஊதியத் துடன் இக்கூட்டுறவு சங்கத்தால் உழவர்களுக்கு இன்னொரு வசதியுமுளது. அதாவது பங்காளிகளில் பெரும்பாலர் நினைப் பின் சங்க லாபத்தில் ஒரு பகுதியை உழவு நூல் நிலைய நிறுவுதல் நடத்துதல் வகைக்குத் தெறித்தெடுத்து உழவர்களுக் குபயோகப் படுமாறு செய்துகொள்ளலாம்.

(தொடரும்)

ஆங்கிலக் கல்வியும், அரசாங்க சேவையும்.

(நாங்குனேரி, சு. அருணுசலம் பிள்ளையவர்கள்)

'உத்தியோகம் புருஷலட்சணம்' 'ஆழாக்காசுக்கு சேவிப்பி னும் அரசாங்க சேவகம் மேல்' என்னும் அறிஞருரையின் உண் மையை ஆங்கில ஆட்சியில் கண்கூடாகக் கண்ட நம்மவர்க்கு உத்தம தொழிலாய உழவுத் தொழில் வாணிபம் முதலியன உபயோகமற்றதாயின. பெரும்பாலும் அரசாங்க சேவையின் அவாவால் அளவற்ற பொருளை அள்ளி இறைத்து அயலிடம் சென்று ஆங்கிலம் கற்பாராயினர். இதனுல் காலத்தைப் போக்கிக் கருத்தைப் பாழாக்கிக் கஷ்டப்படுவதுமன்றி, தாய் மொழியாம் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு ஆன்மார்த்த நூல்களடியோ டழிவதாயின. ஊன் வளர்த்த லொன்றே உயர்வாய்க் கருதி ஆசாரம் நீத்து அனுசாரம் குடிகொண்டது வாலிபர் தம் கோல மும் வறுமைப் பிணியாளரின் துயருமே மிகுந்தன.

அந்தோ! நாட்டில் ஆங்கிலம் கற்றூர் தொகை அதிகரிக்க வே, அரச சேவையின் பல துறைகளினும் அற்ப தொழில்கூடக் கிடைப்பதரிதாயின. ஆகவே கைப்பொருளும் போக்கி காலத் தை வீணுக்கி செய்தொழிலும் விட்டுத் திண்டாடுவாராயினர். உத் தியோக ஆசையால் உள்ள பொருளிழந்து ஊர் ஊராய்த் திரிந்து கொடுத்த பொருள் போதுமென்று கும்பிட்டுக் கூத்தாடி குலத் துக்கீனம் செய்யவும் தலைப்பட்டனர். அடிமைத் தொழிலாசை

யால் ஆகாயக் கோட்டை கட்டி ஆங்கிலங் கற்று அடுப்பூதும் தொழிலில் அமர்ந்து அல்லற்படவுமாயினர்.

அம்மம்ம! இஃது இம்மட்டில் நில்லாது நம்முள் த்வேஷம், பொறாமை முதலிய பல தீக்குணங்களையும் கொண்டு வந்து விட்டன. மேதையீர்! இனியேனும் விழித்து கற்பன கற்று, காலத்தின் அருமை அறிந்து, உத்தியோகப் பற்றொழிந்து உழவு தொழில் மேற்கொண்டு; வாணிபமும் கைத்தொழிலும் வழுவாது பெருக, வாழ்வால் மிகுந்து வறுமைப் பிணி விட்டொழிந்தோடும் வகையே முற்பட்ட பரம்பொருளை பல்காலும் பணிகின்றேன்.

சுகாதாரம்.

சானிட்டரி இன்ஸ்பெக்டர்,

திரு. உ. கணபதியப்ப முதலியாரவர்கள்.

(முன் தொடர்ச்சி)

உதாரணமாக முன்னுற் கூறிய பலவகை அவாக்களில் ஒன்றான, 'உயர்ந்த அரசாங்க உத்தியோகத்திற்குவரவேண்டும்', என்ற எண்ணத்துடன் ஒரு நண்பர் தகுந்த பொருளுதவியுடனும் பெரியவர்களுடைய அபிமானத்துடனும், கலாசாலையில் கல்வி பயின்று வருங்காலத்தில் ஒருவருஷம் பூராவையும் வேடிக்கைகளிலும் விளையாடுவதிலுமாகக் கழித்துவிட்டு மாணவர்களின் திறமை யறிந்து உயர்ந்த வகுப்பிற்கு அனுப்ப ஏற்பட்டுள்ள பரீட்சைக்காலம் வந்ததும் ஒருவாரமாக இரவும் பகலும் ஓயாது கண்விழித்துப் பாடங்களைப் பயில முயலவே, ஒருக்காலும் அவ்வளவு கஷ்டத்துடன் உழைத்தறியாத அவர் யாக்கை இயந்திரம், வேலை அதிகப்படவே, எந்த வேலையைத்தான் செய்வது என்று தெரியாது, சாதாரணமாய்த் தான் செய்யும் வேலையையும் செய்யாது திகைத்தது. ஆகவே தகுந்த காலத்தில் ஜல மலங் கழியாமலும், சரிவர உணவருந்தாமலும் உடம்பில் உஷ்ணம் அதிகரிக்க அவர் காய்ச்சலில் கஷ்டப்பட்டார். பரீட்சைக்காலமுழுதும் பாயும் படுக்கையு

மாயிருந்தார். பரீக்ஷைக்குப் போகவுமில்லை அதன் பயனையடையவுமில்லை. உடம்பு சுகமடைந்ததும் அவர் சொன்னார், 'எனக்கு இந்த வருஷத்தில் உயர்ந்த வகுப்பிற்குப் போக யோகமில்லை. அதனாலேதான் காய்ச்சல் வந்தது.' என்று.—ஆனால் அவர், 'இந்த வருஷம் உயர்ந்த வகுப்பிற்குப் போக எனக்குப் பிரியமில்லை. அதனாலேதான் காய்ச்சல் வருத்திக்கொண்டேன்,' என்றுசொன்னால் மிகவும் பொருத்தமாயிருந்திருக்கும்.

இவ்விதம் தேக அசௌக்கியமானது ஒருவனுடைய வாழ்வை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்று கவனிப்போமானால், அது அவனுடைய வாழ் நாட்களையும் வாழ்வின் உயர்வையும் குறைத்து அவன் ஆசைகொண்டு அடைய எண்ணிய யாவையும் இழக்கச்செய்கிறது. ஆகவே தேக சௌக்கியம் ஒருவனுக்கு எவ்வளவு இன்றி யமையாதது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. இதை யறிந்தும்மனேகர் தேகசுகத்தைச் சிறிதுங் கவனியாது நடப்பது மிகவும் வருந்தத்தக்கதே.

ஆதலால், சகோதரர்களே! 'தேக சௌக்கிய மின்மை' என்றதை அறவே ஒழிக்க முயலவேண்டும். ஏதாவது வியாதி அணுகும்பொழுதெல்லாம் விதியென்றும் கஷ்டகாலமென்றும் சொல்லிக்கொண்டிருத்தலாகாது. கூடுமானவரையில் வியாதியை எதிர்த்துச் சண்டைசெய்யவேண்டும். அதை, நம்மை அணுகவொட்டாமல் துரத்தவேண்டும். நமது தேக சுகத்திற்கு ஆதாரமாயிருக்கும் அம்மார்க்கமே 'சுகாதார' மெனப்படும். அம்முறைகளை அநுஷ்டித்து வந்தால், தேக ஆரோக்யத்துடனும் திடகாத்திரத்துடனும் வாழ்ந்து நீடித்த ஆயுளைப் பெறலாமென்பதில் ஐயமில்லை. அம்முறைகளை அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக, தேக சௌக்கியத்தைக் கொடுக்கக்கூடிய வியாதி என்பது என்ன, அது எவ்வித மேற்படுகின்றது, அதை எவ்வாறு தடுக்கலாமென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

(தொடரும்)

கதர் உடுத்துங்கள்.

இந்தியாவில வசிக்கும ஜனங்கள் சுமார 30 கோடி. சண்டைக் காலத்தில ஒவ்வொருவருக்கும் செலவான துணி 9½ கஜம. சௌக்கியமான காலங்களில் செலவாகும துணி 15 கஜம. 15 கஜம் துணிக்கு 5 ராத்தல் நூல் வேண்டும். 30 கோடி ஜனஙகளுக்கு 150 கோடி ராத்தல நூல் வேண்டும்.

தினக்தோறும் ஒரு பெண் சராசரி சுமார் 2 பலம நூல நூற்பாள். ஒரு வருஷததில சுமார் 100 ராததல் நூல நூறபாள் ஆகையால் 15 கோடி ராத்தல் நூலை நூறக 1½ கோடி பெண்கள் வேண்டும.

தினகதோறும் ஒரு நெசவுக்காரன் சுமார 8 கஜம் துணி நெசவு செயவான் 15 கோடி ராததல நூலை நெய்ய சுமார் 10 லட்சம் நெசவுககாரா வேண்டும.

ஆகவே இநதிய மகா ஜனங்களுக்கு வேண்டிய துணியனைத்தையும் செயது தரவேண்டியது 1½ கோடி நூறபவர்களும் 20 லட்சம் நெசவுக்காராகளுமேயாகும. இது முடியாத காரியமா?

கதரின் வெற்றி.—கதா இயககம் தோனறி இரண்டு வருஷங்கள் ஆயின. அதறகுள் சென்னை மாகாணத்திற்கு வரும் விதேஷத் துணிகளில 2 கோடி ரூபாய் பெறுமானவை குறைந்துவிட்டன.

இஙகிலாந்தில் பிளாக்பான என்னும ஊரிலுளள மில்களில் சுமார் 30 ஆயிரம் தறிகள் வேலையிலலாமல் நிற்கின்றன. அங்கே 36 மில்களிருககின்றன. அவைகளில் கதா இயககத்திறகு முன் வருஷம 1-சகு 100-க்கு 36 வட்டி கிடைததது. கதா வந்தபின 9 மிலகளில் 100-ககு 5 வட்டியே கிடைத்தது. 9 மில்களில் வட்டியே கிடையாது.

சில மாதங்களுக்குமுன் மாஞ்செஸ்டரில் வெளியாகும் மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகையில கதர் இயக்கத்தினால் வருஷப்

1-க்கு இந்தியாவுக்குப்போன சீமைத்துணிகளில 100 கோடிக ளும் குறைநதுவிட்டதென்று கூறப்பட்டிருந்தது.

பஞ்சாபில ஷைராட்டினம் இல்லாத வீடே கிடையாதெனறு சில மாதஙகளுக்குமுன அஙகுச சுற்றுபபிரயாணஞ்செயத சக்ர வாததி ராஜகோபாலாசசாரியாா பால இந்தியா பததிரிகையில எழுதியிருநதாா

ஆகையால முயறசிசெய்தால் விதேச ஜவுளிவருவதை மிக எளிதாக நிறுததிவிடலாம.

ஆகையால சகோதரர்களே! நாட்டின் நலத்தைக் கருதி இன்றே கதா உடுததுஙகள

சுதத கதாதுணி உடுகதிறைல் துணிககுக கொடுத்த பணம் ஏழைகளுககுப் போய்ச்சேரும தேசத் தொணடாகும், நாடுசெ ழிக்கும்; துணி நீண்டநாளாக நிறகும, குடுமபசசெலவு குறையும்; மறறததுணிகளுககுப் பணம போடடால நமது கைத்தொழில கள் அழிநதுபோகும, நாட்டில பஞசம் அதிகரிககும, நாம அடி மைகளாகவேயிருபபோம.

திருச்செநதூர் தண்டகமாலை

பிழை திருத்தம்.

பககம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம
395	காபபு	1	சிா	சீா
396	4	1	பேதேனும	போதேனும
,,	6	2	வண்டனையுங	வணடனையுங
397	12	1	மாறுன	மாறுனை
396	4	3	பொககேதான	போக்கேதான
398	15	4	துடைததனையா	துடைத்தனையா
,,	22	1	டெனறுளள	டெனறுள்ள
,,	,,	3	செந்தூா	செநதூரா

விவசாயம்.

திரு. வ. வெ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

மனிதர் செல்வம் செல்வம் என்று பாக்கிறார்கள். ஆனால் செல்வத்தைத் தேடும் முறை தெரியாமல், உத்தியோகம் என்று புனைப் பெயரால் அழைக்கப்படும் அடிமைத் தொழிலிலும் கண்டிராக்ட் என்று சொல்லுகிற ஒப்பந்த வேலையிலும், ஸ்பெகுலேஷன் என்று சொல்லப்படுகிற சூது விளையாட்டிலும், கள் சாராயம் முதலிய லாகிரிகளின் விற்பனையிலுந்தான் பெரும்பாலும் இறங்கிச் செல்வத்தைச்சேர்க்க முயலுகிறார்கள். இத்தகைய காரியங்களில் இறங்குபவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்கு வயிற்றைக்கழுவப் போதிய அளவு கூட வருமானம் கிடைப்பதில்லை. அநேகர் பெரு நஷ்டம் அடைந்து கெட்டும் போய் விடுகிறார்கள். மிக மிகச் சிலரே தாம் இவைகள் மூலமாகச் செல்வந்தர்களாகிறார்கள்.

ஆனால் பிடிவாதத்தோடு, மனம் வைத்துச் சரியான வழியில் முயற்சி செய்கிற அனைவருக்கும் பாரபக்ஷமில்லாமல் அமோகமாய்ச் செல்வம் அளிக்கப் பூமிதேவி காத்துக்கொண்டிருக்கிறாள். அவள் ஒருத்திக்குத்தான் ஜாதி வித்தியாசம், சமய வித்தியாசம், தாக்ஷிணியம் முதலியவை இல்லை. உழைத்த மட்டிற்குப் பயன் தருகிறாள். சாமானியமாக உழைத்தால் சாமானியமான பயனைத் தருகிறாள். வழி தெரிந்து பெருமுயற்சி செய்தால் 'மடி கற்றுத் தான் முந்து'ற்று எதிர்பார்க்க முடியாத அளவுக்குக் கூடப் பயனைத் தந்து விடுகிறாள். ஆனால் அறிவோடு, பொறுமையோடு, பணிவோடு செய்யவேண்டும். சளைக்காமல் ஆராய்ச்சிகள்செய்து வரவேண்டும். செய்த ஆராய்ச்சி முறைகளை நினைவிலும் குறிப்பிலும் வைத்துக்கொண்டு, வந்த பயனுக்கேற்றபடி அவற்றை மாற்றியோ திருத்தியோ அமைத்துக்கொண்டு, புதிய ஆராய்ச்சிகள்செய்து புதிய முறைகளைக் கண்டுபிடித்து அனுஷ்டிக்கவேண்டும். ஆராய்ச்சிசெய்வதில் அலம் பிரக்கினை—போதும் என்கிற எண்ணம்—இருக்கவே கூடாது.

இந்த வழிகளில் வேலை செய்து ஐரோப்பியரும் அரிய பயனை அடைந்து வருகிறார்கள். பெல்ஜியம் நாட்டில் பத்து வருஷத்து விளைவைச் சராசரி பார்த்ததில் ஓர் ஏக்ராவில் ஒரு போகத்துக்கு 550 பக்கா கோதுமை விளைந்ததாம். நன்றாகப் பண்படுத்தின பூமியில் 1134 பக்கா வந்ததாம். அந்த நாட்டில் ஒரு சதுர மைலுக்கு 589 ஜனங்கள் இருக்கிறார்கள். 40 வருஷங்களுக்கு முன் அவர்களில் 490 ஜனங்களின் ஆகாரம் அவர்களுடைய குறுகிய நாட்டிலேயே உண்டாக்கப் பட்டதென்பதிலிருந்து அவர்களுடைய வேளாண்மைத்திறத்தை ஒருவாறு நிச்சயம் செய்து கொள்ளலாம். அமெரிக்காவில் நன்றாக வேலை செய்த பத்து வேளாளர் ஓர் ஏகராவில் 1730 படி முதல் 2300 படி வரையில் மக்காச் சோளம் அறுத்தார்கள். சில ஏகராக்களில் 31 டன் அதாவது 69,440 ராத்தல் உருளைக் கிழங்கு எடுத்திருக்கிறார்கள்! டென்மார்க்கில் ஏகராவிற்கு 800 பக்கா கோதுமை விளைகிறது. இந் நாட்டில் 28 லக்ஷம் ஜனங்கள்தான் இருக்கிறார்கள். சாகுபடிக்கு யோக்கியமாக 70 லக்ஷம் ஏகர்தான் இருக்கிறது. இந்தப் பூமியிலிருந்து இவர்கள் நாலுகோடி பவுன் கிரயமுள்ள உணவுப் பதார்த்தம் உண்டுபண்ணுகிறார்கள். 145 லக்ஷம் பவுன் விலையுள்ள உணவுப் பொருள்களை அவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள்!

ஆனால் பிரஞ்சுத் தோட்டக் காரர்களே பழ மரங்கள் வைத்தும் கறிகாய்ப் பதார்த்தங்கள் பயிர்செய்தும் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமான லாபம் சம்பாதிக்கிறார்கள். ஓர் உதாரணம் எடுத்துக் காட்டுவோம். போன்ஸ் என்ற ஒரு தோட்டக்காரன் இரண்டேமுக்கால் ஏகரா வைத்திருந்தான். தண்ணீர் இறைப்பதற்கு ஓர் இயந்திரம் உள்பட அவனுடைய நிலத்தின் கிரயமும் செலவும் சேர்த்து 1136 பவுன் அல்லது 17,000 ரூபாய் ஆயிற்று. தோட்டத்தில் போன்ஸைச் சேர்த்து எட்டுப் பேர் வேலை செய்தார்கள். கறி காய்களைப் பாரிஸ் சந்தைக்குக் கொண்டு போவதற்குப் போன்ஸ் ஒரு குதிரையும் வைத்திருந்தான். பாரிஸிலிருந்து திரும்பும்போது அவனும் ஆட்களும் எரு அள்ளி வருவார்கள்.

ஒரு வருஷத்தில் இவ்வாறு 1500 ரூபாய் பெறும்படியான எரு வாரிவருவார்கள். குத்தகைக்கும் வரிக்குமாக வருஷம் 1500 ரூபாய் செலவாகும். இந்த இரண்டே முக்கால் ஏகரா நிலத்தில் வரும்படியோ சொல்லி முடியாது. அவற்றுள் முக்கியமானவை, 20,000 ராத்தல் கரோத்து (பறங்கிக்காய்போலத் தித்திக்கும் ஒரு காய்) 20.000 ராத்தல் வெங்காயம், முள்ளங்கி முதலியன. 6000 முட்டைக்கோஸ், 3000 காலிப்ளவர், 5000 கூடை தக்காளிப்பழம், 6000 முதல்தரப்பழங்கள் 1,54,000 ஸலாது எல்லாம் சேர்த்துப்பார்த்ததில் இரண்டரை லக்ஷம் ராத்தல் சாகங்கள் அகப்பட்டன! இவன் ஒருவன் தான் இவ்வாறு வேலைசெய்து வந்தான் என்று நினைக்கவேண்டாம். பாரிஸ் நகரத்தைச்சுற்றி 5000 பேர் 2,125 ஏகராக்கள் பயிர்செய்து பாரிஸிலுள்ள 20 லக்ஷம் ஜனங்களுக்கு வேண்டிய சாகங்கள் உற்பத்தி செய்வது மல்லாமல் லண்டனுக்குக்கூடச் சாகங்கள் அனுப்பி வருகிறார்கள்

இன்னும் ஓர் உதாரணம் மாத்திரம் காட்டுவோம். கொன்ஸே என்று இங்கிலாந்துக்குச் சொந்தமான ஒரு பிரெஞ்சுத் தீவு இருக்கிறது. அதிலுள்ள பாறைகள், மலைச் சிகரங்கள் உட்பட அதன் விஸ்தீரணம் 16,000 ஏகராவுக்கு மேலில்லை. அவற்றுள் 9884 ஏகராக்கள் தாம் பயிர் செய்ய யோக்கியமானவையாம். ஆனால் அத்தீவிலிருந்து வருஷா வருஷம் ஏற்றுமதியாகும் சாகங்களைக் கணக்கிட்டு யெடுத்துச் சொன்னால் பொய்போல இருக்கும். இருப்பினும் ஒருமட்டுக்குக் குறிப்பிடுவோம்.

முப்பது வருஷங்களுக்கு முன் $11\frac{1}{4}$ லக்ஷம் ராத்தல் கொடிமுந்திரிப் பழம், 22 லக்ஷம் ராத்தல் தக்காளிப் பழம், 20,000 பவுன் பெறுமானமுள்ள உருளைக் கிழங்கு, 9000 பவுன் விலையுள்ள முள்ளங்கி முதலியன, 3000 பவுனுக்குப் புஷ்பங்கள், 200 பவுன் விலையுள்ள நாய்க்குடை ஆக ஒரு லக்ஷம் பவுனுக்கு இத்தீவார் ல்ண்டனுக்குச் சாகங்கள் அனுப்பிவந்தார்கள். ஆனால் சகம் 1832-ல் அதாவது 14 வருஷங்களுக்கு முன் அதன் 5 லக்ஷம் பவுன் விலையுள்ள உருளைக் கிழங்கு உள்பட 11 லக்ஷம்

பவுனுக்குச் சாகங்கள் ஏற்றுமதி செய்தார்களாம்! இன்றைக்கு இவ்வியாபாரம் இன்னும் அதிகமாயிருக்கும் என்பதில் தடையே இல்லை. இதனால் இவர்களுடைய நிலங்களில் 7260 மாடுகளுக்கும் 900 ஆடுகளுக்கும், 1480 குதிரைகளுக்கும் ஜீவனம் கிடைத்ததாம்.

இத்தனைக்கும் நாம் மேலே பிரஸ்தாபித்த பூமிகள் இயற்கை வளம் நிரம்பியவை அல்ல. அநேகம் மிகச் சாமானிய பூமிகள். தேசமும் குளிர்ந்த தேசம். ஆனால் பிரகிருதி மறுத்திருக்கிற வளப்பத்தை மனிதன் பூமிக்கு உண்டாக்கிவிட்டான். நாம் பேசிய பிரெஞ்சு வேளாளர் பூமிக்கு அடியில் குழாய்கள் போட்டு அவைகளை வெந்நீரால் நிரப்பிப் பூமியை உஷ்ணப்படுத்துகிறார்கள் வைத்யுத சக்தியைப் பிரயோகித்துப் பூமியை மேலும் மேலும் சாரக்கச் செய்கிறார்கள். பூமிக்கு உரம் சேர்ப்பதற்கு அவர்கள் பின்வாங்குகிறதேயில்லை. குத்தகை ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும்போது, தான் போட்ட உரத்தினால் உயர்ந்த மண்ணையும் வாரிக்கொண்டு போவேன் என்று நிபந்தனை கண்டே தான் குத்தகைக்காரன் நிலக்காரனுக்குக் குத்தகைச் சீட்டு எழுதித்தருகிறான் அவ்வளவு தூரத்துக்கு அவர்கள் பூமியைப் பண்படுத்துவதில் கருத்தைச் செலுத்துகிறார்கள்.

நம் நாட்டு பூமி இவர்களுடைய பூமிக்கு வளப்பத்தில் எள்ளளவும் தாழ்ந்ததில்லை. தாமிரபர்ணி, காவேரி, கிருஷ்ணை, கோதாவரி, கங்கை, ஸிந்து முதலிய திவ்விய நதிகள் பாய்கிற பிரதேசங்கள் நிலவளம் நீர்வளங்களில் எந்த நாட்டிற்கு இளைத்திருக்க முடியும்? ஆனால் இவை மாத்திரம் போதுமானால் நாம் பயிர்த் தொழிலில் ஐரோப்பியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இவ்வளவு பின்னே இருக்கமாட்டோம். ஆகவே செல்வச் செருக்குக்கு நில வளமும் நீர் வளமும் மாத்திரம் போதா. குடி வளந்தான் முக்கியமானது. 'வீரப்ஹோக்யா வஸுந்த்ஹாரா' என்பது பழமொழி. ஆள் வினை உள்ளவருக்குத்தான் நிலம் பயன் தரும். ஆகையால் இனியாவது நாம் மற்ற நாட்டவரைப்போல விவசாயத்தை அறிவாளிகள் இறங்கிச் செய்யவேண்டிய தொழி

லாகப் பாவித்து நடத்தல்வேண்டும். உத்தியோகம் உத்தியோகம் என்று பறந்துகொண்டு உள்ள நிலங்களை விற்றும் கொத்து வைத்தும் பணம் வாங்கி ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் படித்து பிழைக்கும் வழி தெரியாமல் அலைகிறவர்கள் மேல் நாட்டவர் முறையைத் தெரிந்துகொள்வதற்கு மாத்திரம் போதிய அளவுக்கு ஆங்கிலம் படித்துக்கொண்டு, தங்கள் நிலங்களை விற்காமல் வைத்துக்கொண்டு அதைச் சரியானபடி கிருஷி செய்து வந்திருந்தால் எவ்வளவு சுகமாக வாழ்ந்திருப்பார்கள்? நாட்டின் செல்வத்தை எவ்வாறு பெருக்கியிருப்பார்கள்? ஆனால் போனதை நினைத்து வருந்துவதில் பயனில்லை. இறந்த காலத் தவறுகளை வருங்கால வளர்ச்சிக்குச் சோபானங்களாக வைத்துக்கொள்ளுவதே அறிவாளிகளின் இலக்கணம். ஆகையால் நாட்டின் செல்வத்தை வளர்க்க ஆசை கொண்டவர்கள்; நாம் மேலே எடுத்துக்காட்டிய மேனாட்டவர் முயற்சியை ஒரு தூண்டுகோலாக வைத்துக்கொண்டு ரஸாயன ஆராய்ச்சிகளில் இறங்கி விவசாயத்தையும், கொடிக்கால் தொழிலையும் மேற்கொள்வாராக.

அடிகளின் அமைதி.

ஓர் ஐரோப்பியர் கருத்து.

மகாத்மா காந்தியுடன் இளமை முதல் பழகிவந்த டாக்டர் ஜோசய்யா ஓல்ட் பீல்ட் என்பார், லண்டன் பத்திரிகையில் எழுதி யுள்ள ஒரு கட்டுரையின் சாரம் வருமாறு:—

காந்தியடிகள், அவருடைய வாழ்க்கைக் காலத்திலேயே சிறப்புற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அவருடைய ஒழுக்கமே முக்கிய காரணமாகும். அவர் பண ஆசைபிடித்தவர் என்று இதுகாறும் எவரும் அவரைக் குறைகூறியது கிடையாது. நாணயப்பொறுப்பின்றி நடந்துகொண்டார் என்றும் எவரும் அவரைச் சொல்ல முடியாது. பணத்தைக்கொண்டோ, பட்டங்கள் வழங்குவதன் மூலமாகவோ இவரைச் சாந்தப்படுத்திவிடமுடியாது. எவ்வித துன்பம் வந்தெதிர்த்தபோதிலும் மரணமே சம்பவிப்ப

தாயிருந்தாலும், இவர், தாம் எதைச் சரியென்று நம்புகிறாரோ அதனின்றும் பிறழமாட்டார்.

இவர் இளைஞராயிருந்தபோது சட்டப் படிப்புக்காக இங்கிலாந்து வந்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. இவர் மிகுந்த சங்கோஜ சுபாவமுடையவர். இறைச்சி சாப்பிடுமாறு பலர் இவரை வற்புறுத்தியும் இவர் சிறிதும் இணங்கவில்லை. பலவிதமான வாதங்களுக்கும் இவர் சிறிதும் இசைந்து கொடுக்கவில்லை. இறைச்சி சாப்பிடாவிட்டால் இங்கிலாந்தில் தேகாரோக்கியத்தோடு இருக்க முடியாது என்று சொல்லப்பட்டதற்கு, "நான் ஆண்டவன் கையிலிருக்கிறேன். அந்நிய நாட்டில் தனியாக நான் இறந்துபோகவேண்டுமென்பது அவர் விருப்பமானால், அதற்கு மாறாக நாம் என்ன செய்ய முடியும்? ஆனால் சில காலம் உயிர் வாழ்வதற்காக என் ஆன்மாவை நான் விற்றுவிடச் சித்தமாயில்லை" என்றார்.

நாங்கள் இருவரும் ஒன்றாகவே வசித்தோம். ஒன்றாகவே உண்டோம். ஒன்றாகவே, பல விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சியும் செய்தோம். அக்காலத்தில் அவர், ஒரு முறையாவது எதிலும் தவறி நடந்ததில்லை. முட்டைகள் சாப்பிடலாமென்றும் அது ஜீவஹிம்சை யாகாதென்றும் நான் கூறினேன். ஆனால் அதை அவர் அங்கீகரிக்கவில்லை. தாயார் முன்னிலையில் என்னென்ன பிரதிக்ஞைகள் எடுத்துக்கொண்டாரோ அதை அவர் பூரணமாக நிறைவேற்றி வைத்தார். அவர் பாரிஸ்டர் பரீட்சைக்குத் தேறி இந்தியாவுக்குச் சென்றுவிட்டார். பிறகு தென்னாப்பிக்கா இந்தியர் துயரத்தைப் போக்குவதற்காக அவர் இங்கிலாந்து வந்தபோது மீண்டும் அவரை நான் சந்தித்தேன். இதற்காகப் பலரைக் கண்டு பேசினார். பல பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்தார். ஒருசமயம் தென்னாப்பிரிக்கா இந்தியர் விஷயமாக ஒரு கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அச்சமயம் நான் அங்கு சென்றேன். உடனே ஸ்ரீகாந்தி என்னிடம் வந்து, "எனக்குப் பல்வலி அதிகமாயிருக்கிறது; ஒரு பல்லை உங்களால் எடுத்துவிடமுடியுமா?" என்று கேட்டார். பல்

வைத்தியரிடம் போகச் சொன்னேன். ஓய்வு இல்லை என்றார். உடனே வெளிச்சென்று சில ஆயுதங்களைக் கொணர்ந்து, எவ்விதமருந்தும் போடாமல் அவருடைய பல்லைப் பிடுங்கிவிட்டேன். இதற்காக அவர் சிறிதும் துன்பம் அடைந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. உடனே தமது வேலையைக் கவனிக்கச் சென்றார். வேறெவரும், பல்பிடுங்கப்படும்போது சும்மாயிருந்திருக்க முடியாது.

சங்கீதம்.

கடவாத்யம்.

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸஐயங்கார் பி. ஏ. எழுதுகிறார்;-

நமது ஆர்யர்களின் நூல் முறைகளில் இரண்டில் கடம் என்ற பொருள் விவஹரிக்கப்படுகிறது. 6 தர்சனங்களில் ஒன்றான ரூபாயாயம்அல்லது தர்க்கமென்பதில் கடம் படம் குட்யம் குஸுலமென்ற பதங்கள் வழங்குகின்றன. (குடம், வஸ்த்ரம், சுவர் முதலியவை) இரண்டாவது ஸ்தலம் காந்தர்வ வேதமென்ற உபவேதங்களில் ஒன்றே. அதாவது ஸங்கீத சாஸ்திரமெனப்படும். லயம், களம் முதலியவைகளைப்பற்றிச் சொல்லும் பாகங்களில்பல வாத்தியங்களுடன் கடமென்ற வாத்யமும் குறிப்பிடப்படுகிறது. அதற்குரிய சில படிப்பினைகளும் தான வரிசைகளும் சில பழைய ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றன. ஆகையால் இது பூர்விக ஸம்பிரதாயமான வாத்யமல்லவென்று சிலர் ஆட்க்ஷேபம் செய்வதற்கு இடமில்லை.

தமிழ் நாட்டில் இந்த வாத்யத்தைக் கையாடி விசேஷப் பிரசித்திபெற்றவர்களில் அடியிற்கண்டவர்களைப்பற்றியே எனக்குச் சிறிது தெரியும். இதைவிட அதிகமாகத் தெரிந்தவர்கள் தங்களுடைய அனுபவத்தை என்னைப்போல் வெளியிட்டு ஸங்கீதாபிமானிகளை உபகரிப்பவர்களென்று நம்புகிறேன்.

போலகம் வைத்தியநாதையர்:—நான் இவரைநேரில் பார்த்ததில்லை. இவரைப்பற்றிக் கேட்டதுண்டு. அக்காலத்திலுள்ள ப்ர

ஸித்தமான பாடகர்கள் பாடும் எவ்விதமான பல்லவிகளுக்கும் அனுஸரித்து வாசிப்பவரென்ற பெயர் வாய்ந்தவர். தனி வாசிப்பைப்பற்றி அவ்வளவு ப்ரஸித்தியுண்டென்று தெரியவில்லை.

போலகம் சிதம்பரமய்யர்—நான் இவரை நேரில் பார்த்திருக்கிறேன். வாசித்துக் கேட்டுமிருக்கிறேன். இவரைக் கோயமுத்தூரில் சந்தித்தபொழுது இவருக்கு வயது சுமார் 50க்குமேலிருக்கும்.

நல்ல தேக புஷ்டியும் ஆகிருதியும் கம்பீரமும் வாய்ந்தவர் சற்றுக் கறுத்த நிறமுடையவர். நான் கேட்ட சமயங்களில் இவர் எந்த வித்வானுக்கும் பக்கவாத்தியமாக வாசித்ததில்லை. தானே சில உருப்படிகளை விந்யாசமாகப் பாடிக்கொண்டு வாசித்தார், இடைக்கிடையே தனிஆவர்த்தங்களைக் கலப்பதுண்டு. நான் அதைப்பற்றிக் கவனித்த விஷயங்களில் பத்து விரல் நகங்களாலும் ஓர்விதமான சப்தத்தையுண்டாக்கி, மேல்கால உதவுபடிகளை வாசிப்பதில் இவருடைய கையிலிருந்து உண்டான நாதத்தை அதற்குப்பின் வந்த எவரிடத்திலும் கேட்டதில்லை. வெகு விவரமாகவும் நினைத்த கல்பனைகளுக்குஅனுகுணமாகவுமிருந்ததுடன் வெள்ளிப்பட்டையின்மேல் வெள்ளிச் சுத்தியால் அடிக்கும் ஒலியைப்போன்றது. வெண்கலநாத மென்பது இதல்ல. வேறு அதைக்காட்டிலும் கொஞ்சம் பெருபடியானது இவருக்குத் தனிக் கச்சேரிகளே அதிகமாக ஏற்பட்டன.

குறுங்குளம் பிச்சுவய்யர்:—இவரையும் நான் நேரில்பார்த்ததில்லை. வாசித்துக் கேட்டதுமில்லை. எனது நண்பரான காலஞ்சென்ற உமயாள்புரம் கடவாதயம் நாராயணய்யர் சொல்லிக் கேட்டதுண்டு. இவர் கடம் வாசிக்கும்பொழுது கையில் மதுரமான சலங்கைகளைக் கோர்த்துக் கட்டிக்கொண்டு கடத்தின் நாதத்திற்கு மெருகு கொடுத்துக்கொண்டே வாசிப்பாராம்.

உமயாள்புரம் நாராயணய்யர்:—இவருடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். இவர் மஹா வைத்யநாதசிவன், பட்டணம் ஸுப்ரஹ்மண்யய்யர், நாமக்கல் நரஸிம்ஹய்யங்கார், சின்ன வைத்

யுறைதம்பூர் முதலிய பிரபல ஸங்கீத வித்வான்களின் காலத்தில் விளங்கினவர். அப்பொழுது வேறு கடவாத்யம் வாசிப்பவர் கிடையாது ஆகையால் பெரிய கச்சேரிகள் யாவற்றிலும் இவரையே தருவிப்பதுண்டு. மிகுந்த ஈஸ்வர பக்தியுள்ளவர், ஸாத்வீக சுபாவமுடையவர். பரோபகாரி, பல மாணாக்கர்களுக்கு அன்னவஸ்திரமளித்து, வித்தையைக்கற்பித்தவர்; ஆயினும், தான் திரவிய ஸம்பன்னரல்ல; ஏழையென்றே சொல்லலாம். போலகம் சிதம்பரையரிடத்தில் தான் சிலகாலமிருந்து கற்றதாகவும், பெரும்பாலும் தானே அப்யாஸத்தாலும் கேள்வியாலும் வித்தையை அபிவிருத்தி செய்துகொண்டதாகவும் சொன்னார். முதல்முதல் போனோகிராப் என்ற இயந்திரம் தமிழ்நாட்டில் வழங்கினபொழுது கும்பகோணத்தில் அதைத் தருவித்த ஒருவர் ஒரு ரிக்கார்டு படித்தார். அதின் வரலாறு வெகு விசித்ரமானது. சென்னையில் வெகு தனிகரான ஒரு செட்டியார் வீட்டுக் கல்யாணத்தில் வேணுகானம் சரப சாஸ்திரிகளும் திருக்கோடி காவல் பிடில் கிருஷ்ணய்யரும் மிருதங்கம் தஞ்சாவூர் நாராயணஸாமி அப்பாவும் கடவாத்யம் உமயாள்புரம் நாராயணய்யரும் தருவிக்கப் பட்டார்கள். அப்பொழுது நானும் சென்னையி லிருந்தேன். அந்தக் கச்சேரியை போனோகிராபில் பிடிக்கவேண்டு மென்று நான் ஆசை கொண்டேன். மேற்சொன்ன வித்வான்களைக் கலந்து கேட்டதில் மற்றவர்கள் ஸம்மதித்தார்கள். கிருஷ்ணய்யர் மாத்திரம் கூடவே கூடாதென்று மறுத்துவிட்டார். சீமையிலிருந்து வந்த இயந்திரத்தில் ஏதோ மாய மிருக்கிற தென்றும் அதில் வாசிப்பைக் கொடுத்தால் ஆயுள் குறையு மென்றும் பிறகு வாசிக்கும் திறமையே போய்விடுமென்றும் யாரோ அவருக்கு அழுத்தமாக உபதேசித்துவிட்டார். அவரும் அதை வேதவாக்யமாக நம்பிவிட்டார். ஆனால் இவ்வளவு அருமையான கச்சேரி சேருவது சாத்யமல்ல. இந்தச் சமயத்தை விட்டுவிட கூடாதென்று நானும் சரப சாஸ்திரிகளும் பேசி முடித்துக்கொண்டோம். எப்படியாவது அதை ரிக்கார்டு செய்துவிடுகிறதென்று அதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்தோம். கச்சேரி நடக்கும் பெரிய ஹாலுக்கு ஓர் கோடியிலுள்ள ஓர் சிறிய அறையில்

போஞேகிராப் பிடிபபவரையும் இயநதிரததையும் வைதது நாதம் அநத இயநதிரததில படுவதற்கு வேணடிய வளவு மாததிரம கத வைத திறநதுவைத்து அநறகு நோக சரியானவிடத்தில பாட தாகளே உடகாரவைததோம இநத குழசசியில வீடடு எஜமானு னும உடபடடவரே. முதலில சரப சாஸதிரிகள பைரவி ராகத் தில பசசிமிரியம் ஆதிபபைய ரெனற மஹா விதவானுல இயறறப பபடட விரி போணி யெனற அடதாள வாணததை வாசிததார அபபொழுது கிருஷணையா பிடிலும் அபபாவின மிருதஙகமும நாராயணயயருடைய கடமும சாஸதிரிகளின புலலாஙகுழலுககு மயிரிழைகூடப பிசகாமல ஒடடிவநதன விரிபோணி வர்ணம வாராத பாடகனும மாயாத கூதூரா வாராத தாசியும கிடையாதெ னற பழமொழிபபடி அது சஙகீத லோகததிறகே மனபபாடமலலவா? வாணமபாடி முடிநதது

அதறகுள நாஙகள எதிரபாராத ஒரு ஸமபவம நேரந்தது. போஞேகிராப பிடிததவர ஒரு தினுசு சுவாமி அதாவது அடிக கடி தாஹசாநதி செயதுகொளளாவிட்டால ஒனறுந தோனருது அவரைககசசேரிககு ஒரு மணிககு முநதியே அறையில் அடைத்து விட்டோமாகையால அவருடைய போககை ஞாபகத்தில வைத துககொணடு அதறகு வேணடிய ஏறபாடுகளைச செயய மறநது விடடோம. எபபடியோ பலலைக கடிததுககொணடு வாணம முடியும்வரையில பொறுததிருநததே ஆசசரியம வர்ணம் முடிந ததும் குபீரெனறு கதவைத திறநதுகொணடு "பலே, பலே, பேஷ், பேஷ், கிருஷணையாவாள! உமது ஜாலமெலலாம் எனன வாயிறறு" என்று சொலலிககொண்டே எஙக ளெலலாரையும ஒரே தாண்டலாயத தாணடி மிதிததுககொண்டு, மாடிபபடிகளை லக்ஷியஞ செயயாமல நாலு பாயசசலில தெருவில வாது அநதா தானமானா கிருஷணையருககோ கோபம் தலை கால தெரியா மல் வந்துவிடடது

வெகு கலபனையாயும் வந்த சஙகதி வராததும தன்னை ஏமாற றினவாகளை ஸஹஸநாமாச்சனை செயதார. அதில் என உபாயமே அதிகம். அநத வெகு அருமையான ரிகாடு பல வருஷங்கள

வரையில் வழங்கிற்று. பிறகு அந்த ரிகார்டு படித்தவர் ஏதோ அவசரத்தால் அந்த வாத்தியத்தையும் ரிகார்டுகளையும் எங்கே அடமானம் வைத்துப் பாத பூஜை செய்தாரோ எனக்குத் தெரியாது. அதைப்போன்ற இன்னும் பல அபூர்வமான ரிகார்டுகளும் அத்துடன் மறைந்தன. மேற்சொன்ன வித்வான்களின் வாசிப்பை நமக்குக் கேட்பிக்கும் சாதனம் வேறொன்றும் இப்பொழுதில்லை. நாராயணய்யரின் கடத்தின் நாதம் சற்று அடக்கமாகவே யிருக்கும். அதாவது மற்ற வாத்தியங்கள் பெரும் நாதமாகவிருந்தால் அதற்கு சரியாகவாவது அடங்கின நாதமாகவிருந்தால் அதற்கு அடக்கமாகவாவது மாற்றக்கூடியதென்று எனக்குத் தோன்றவில்லை. வேறொரு நாதத்தை அடக்கி வாசிக்கவோ அல்லது வேறொரு நாதத்திற்கு அடங்கி வாசிக்கவோ அவ்வளவு பழக்கமில்லையென்று சொல்லலாம். ஒரே சீராக எக்காலத்திலும் எந்த சுருதியிலும் நாதம் அமைந்திருக்கும் உமையாள்புரத்தில் பால்ய முதல் பழகினபடியால் ஸத்குரு ஸ்ரீ தியகராஜ ஸ்வாமிகளின் சிஷ்யர்களான கிருஷ்ண பாகவதர், ஸுந்தர பாகவதர் அவர்களால் பாடப்பட்ட கீர்த்தனைகளைப் பலமுறை ஐயரவர்கள் கேட்டுக் கேட்டு அநேகம் மனப்பாடமாயின.

ஆகையால் அந்தக் கீர்த்தனங்களை ஸம்ப்ரதாயமாகப் பாடும் பொழுது இவர் வாத்யம் வாசிக்க நேர்ந்தால் அந்தக் கீர்த்தனங்களை அப்படியே ஸங்கதிகள் தவறாமல் தன்வாத்தியதில் வாசித்துக்காட்டுவார். அந்தத் திறமையும் சாதுர்யமும் வேறு எந்தப் பக்கவாத்தியக்காரர்களிடத்திலும் நான் கேட்டதில்லை. மேற்சொன்ன சுந்தர பாகவதரவர்கள் தானே பிடில் வாசித்துக் கொண்டு பாடுவார் ஆகையால் அவரை விலக்கிப் பேசுகிறேன். அதற்கு முன்னிருந்த பிடில் சிவராமகிருஷ்ணய்யரவர்கள் மேற்சொன்ன கீர்த்தனங்களைப் பிடிலில் வாசிக்கும்பொழுது பாடுகிறதுபோலவே யிருக்குமாம். அவரையும் விலக்கிப்பேசுகிறேன்.

(தொடரும்)

இந்தியாவின் மூலப் பொருள்கள்.

ஜனங்களின் கடமை என்ன?

சென்ற வாரத்து "யங் இந்தியா" பத்திரிகையில் மகாத்மா காந்தி எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சாரம் வருமாறு:—

இந்தியாவின் மூலப்பொருள்களைச் சுரண்டவே இந்திய ஏகாதிபத்தியம் காணப்பட்டது. இதற்காகப் பலவிதமான முறைகள் அநுஷ்டிக்கப்பட்டனவென்று ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட சரித்திரங்களே கூறுகின்றன. இந்தியாவில் நியாயமாக ஓர் அங்குலம் பூமிகூட, பிரிட்டிஷ் இராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஒழுக்க ஹீனமான முறைகளால் இந்த ஆட்சி வளர்க்கப்படுகிறது. இந்தியாவை உள்நாட்டுக் குழப்பங்களினின்றும் வெளிநாட்டுக் குழப்பங்களினின்றும் பிரிட்டிஷ் துப்பாக்கியே காத்துக்கொண்டிருக்கிறதென்று பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். உப்பு, மதுபானம் முதலிய ஒழுக்கக் குறைவான துறைகளின் மூலமாகக் கிடைக்கும் வரும்படியைக் கொண்டே இந்த ஆட்சி நடைபெற்று வருகிறது. நிலத்தீர்வையின் அநியாயம் பலருக்குச் சரியாகப் புலனாகவில்லை. ஆனால் பார்டோலி கிளர்ச்சியைக் கவனித்து வந்திருப்போருக்கும், ரெவினியு சட்டங்களைப் படித்து, அது நிர்வகிக்கப்படும் முறையைக் கவனித்துக் கொண்டு வந்திருப்போருக்கும், இந்த ரெவினியு முறையின் ஒழுக்க ஹீனம் புலப்படாமற் போகாது. ரெவினியு சட்டங்களின்படி, ரெவினியு உத்தியோகஸ்தர்களுக்கு யதேச்சையான அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுடைய தீர்மானங்கள் நீதி இலாகாவின் கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை. ரயத்துவாரி முறையாகட்டும், சாசுவத நிலத்தீர்வை முறையாகட்டும், இரண்டின் கீழும் ரயத்துகள் அதிக கஷ்டப்படுகிறார்கள். ரயத்துவாரி முறையினால், குடிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது சமீபத்தில் நடைபெற்ற பார்டோலி கிளர்ச்சியினால் நன்குப் புலனாயிற்று. சாசுவத நிலத்தீர்வை முறையோ, ரயத்துவாரி முறையைவிட, குடியானவர்களை கஷ்டத்திற்குட்படுத்துகிறது. குடியானவர்கள் படுங்கஷ்டங்களுக்கு அவர்களே பொறுப்பாளி

கள் என்பதை நான் மறுக்கவில்லை. குடிகளிற் பெரும்பாலோர், தாங்கள் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தமுடியாத நிலையிலிருக்கிறார்கள் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். புத்திசாலித்தனமுள்ள ஓர் அரசாங்கமானது, தன்னு வரி முறையை நிர்ணயிக்கும்போது, ஜனங்களுடைய பழக்க வழக்கங்களையும் அவர்களுடைய குறைகளையும், கவனிக்க வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கம் அவைகளையெல்லாம் கவனிக்கவில்லை. எப்படியாவது வரி வசூலிக்க வேண்டுமென்பதே அதன் கொள்கையாயிருந்தது. நிலவரியானது, கண்ணுக்குத் தெரிந்த வருமானமாகும். நேராகப் புலப்படாத வருமானங்களும் உள்ளன. நாணய மாற்று முறையினால், இந்தியாவிலிருந்து இலட்சக்கணக்கான பணம் போய் விடுகிறது. பிரிட்டிஷ் துணிகளுக்கு விசேஷ சலுகை காட்டுவதனால், இந்தியாவிலிருந்து வருஷத்திற்கு அறுபது கோடி ரூபாய் சென்று விடுகிறது. இதனால் இந்தியாவில் பலருக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. எனவே, நம் குறைகளையே ஆதாரமாகக்கொண்டு அரசாங்கம் நடைபெறுகிறது. ஒழுக்க ஹீனமான அஸ்திவாரமுள்ள ஓர் ஆட்சி முறையை மாற்றுவதைத் தவிர, ஜனங்களுக்கு வேறு வழியில்லை. இதற்காக அஹிம்சா தர்ம முறையில், நாம் இறங்கி உழைப்போமாக.

உலகத்தோற்றுவாய்.

(சாத்தன்குளம், வக்கீல், திரு. அ. அண்டைக்கலம்பிள்ளை யவர்கள்)

முதலாவதாக உயிர்தோற்றப்பட்ட காலத்துக்கு தோற்றுவாயெனப்படும். தோற்றுவாயென்பது ஆதி எனப்படு முதலாக்கம். ஆ-கட்டு 'இ' விகுதிபெற்று 'வ்' எழுத்துப்பேறு தோன்றி 'ஆவி' என்றும் 'த்' எழுத்துப்பேறு தோன்றி 'ஆதி' என்றுமாயிற்று. இவ்விரு சொற்களும் உயிர் என்னும் ஒரு பொருளுடையன. இக்காரணம்பற்றி "ஆதிபகவன்முதற்றேயுலகு" எனத் திருவள்ளுவரும் கூறியுள்ளார். பகு என்னும் பகுதியின் ஈற்றுயிர் கெட்டு அன்விகுதி பெற்று 'வ்' எழுத்துப்பேறு தோன்றி

பகவன் என்றாயிற்று. ஆணவக்கட்டினுட்பட்டுக்கிடக்கும் உயிர்களைப் பகுத்தெடுத்து மேனிலைக்கண் வைக்கும் சிவபெருமானை முதலாயுள்ளனே உலகு எனப் பொருள்படக்கூறியிருக்கின்றனர். இறைவன், உயிர்ப்பொருள், இருட்பொருள் என மூப்பொருளுள. இவை அநாதி நித்தியமானவை. இவை முறையே பதி, பசு, பாசமென்றுஞ் சொல்லப்படும். உயிர்ப் பொருளிடத்து வினைத்தூர் என்னு மூலகன்மமும், இருட்பொருளிடத்து மயல் என்னும் அசுத்த மாயையும் குடிலை என்னும் சுத்த மாயையும், சார்ந்திருப்பன. யாதொன்றையுஞ் சார்பிலனாக ஏகனாயிருக்கில பதியும் பசுவும், வினைத்தூரும், பாசமும் சுத்த, அசுத்த மாயைகளுமாக ஆறும் தோற்றுவாய்க்குக் காரியகாரணப்பொருளாயிருக்கின்றன. இவைகள் அநாதி நித்தியம் இவ்வாறனுள் மாயையின் கட்டினுட் கிடக்கும் பசுக்களை பகுபகுத்தெடுத்து தன்கருள் செய்வான் திருவுளங்கொண்டவிடத்து நயப்பெறுஞ் சக்தியும் இன்னவுயிர்களை இன்னவாறாக்க வேண்டுமென்றுன்னுமிடத்து உணர்வெனும் சக்தியும் அவ்வாறாக்குமிடத்து செயலெனுஞ் சக்தியும் இறைவனிடத்தே தோன்றும். இவை இச்சா, ஞான, கிரியா சக்திகளெனப்படும். இவ்வாறு கிரியா சத்தி தோன்றிய பொழுதே உயிர்த்தொகைகளாக்கப்படுகின்றன. மாயையினிடத்து உயிர்கள் யாவும் அறிவுடனடங்கிக்கிடக்ினும் ஓரே தன்மையவான இருபொருள்களுளவெனு மியல்பின் மையல் ஒவ்வோருயிரின் வினைத்தூரின் பயனுக்கியைந்தவாறு அவ்விறைவனுயிர் தந்தருள்ச் சிறு புழுமுதல் மாக்களீறான பல படைப்புகள் தோன்றும். இவ்வாறு படைத்தற்குத் திருவுளங்கொண்ட உண்மையறிவின்பமெனுமுவழுதுடைய விறைவன் அவ்வுயிர்கட்கிருப்பிடமாகப் பதினாலுலகங்களை முதலிற்றோற்றுவித்து கேவலர் நீக்கி சகலரில் 3. பிரளயாகலரில் 3. விஞ்ஞானகலரில் 4 ஆகப் பத்துப் பகுதியினருக்கும் இருட்பொருட் கட்டினின்று நீங்கும்பொருட்டு தமிழ்மறையாகிய சிவயநமவெனும் ஐந்தெழுத்தையுந் தந்தருளி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை யியற்றினர். மேற்கூறிய ஐந்தொழிலினும் முன்னைய மூன்றும் உடல்கட்கும் பின்னைய இரண்டும் உயிர்கட்குமாம். இவ்விதமாகப்

புழுமுதன் மக்களீறுன உயிர்களைப்படைத்து அம்மக்களுக்கு இனிமையாகிய தமிழ்மொழியறிவெழுப்பி அவர்கண்மூலமாயுலகி லறத்தை நிலைநிறுத்தும்பொருட்டு முப்பொருளுண்மை தேற்றி அவரவர் தவநிலைக்கியைய வருள்புரிந்து சைவநெறியை நன்குநிறீயினர். இறைவனைத்தவிற மற்ற ஐந்துபொருள்களும் இறைவனது திருவுள்ளப் பான்மை போல வருளொடுங்கிப் பின்னரவர் கருத்தின்படி உயிர்கள் பாச வயத்தனவாய் ரூபம் பெற்று பல கிருத்தியங்களையுஞ் செய்ய வல்லனவாய்ப் பண்டுபோ லிறைவனிடத்தே யொடுங்குமென்பதே முப்பொருளுண்மையாம்.

"அப்பினிற் கூர்மையாதித்தன் வெம்மையா
லுப்பெனப் பேர்பெற் றுருச்செய்த தவ்வுரு
அப்பினிற் கூடியதொன் றாகுமாறு போற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்கு மால்"

எனத் திருமூலர் திருமந்திரத்தாலறியவும். இனி மக்களியலினைக் கூறுதும்

மேல் நாட்டு வாழக்கை.

லண்டன் திரு. N. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள் M. A.

(முன் தொடர்ச்சி)

லண்டனில் இந்தியர்கள் மிகுதியும் வசிக்குமிடம் Indian Students' Union என்னும் மாணவர் சங்கம்தான். இந்நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வந்திருக்கும் சுமார் நானூறு மாணவர்களை அங்கத்தினர்களாகக் கொண்டுள்ள இச்சங்கம் இங்கிலாந்திலுள்ள ஒரு சிறிய இந்தியாவையேபோன்றிருக்கிறது. இது Y. M. C. A. யின் ஆதரவிலும், பொருளுதவியின் பேரிலுமே நடைபெற்றுவருவதால், இதன் சகல நடபடிக்கைகளும், நிர்வாகப்பொறுப்பு முழுவதும் Y. M. C. A. யின் வசமே இருந்துவருகிறது. என்றாலும் அங்கத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரு Advisory committeeயைக் கலந்தே இச் சங்கத்தின் அபிவிருத்திக்கான காரியங்கள் நடத்தப்படுகின்றன. தற்சமயம்

இதன் சார்பாக ஒரு விடுதியும் (Restaraunt) புத்தக நிலையம், முதலியனவும், Ping-pong, Billiards முதலிய விளையாட்டு வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் வெளியாகும் முக்கிய பத்திரிகைகளெல்லாம் இங்கு தருவிக்கப்படுவதால், அவைகளை ஒவ்வொருவாரமும் மாணவர்கள் மிக ஆவலோடு வாசிக்கிறார்கள். மேலும், ஞாயிறு, சனிக்கிழமைகளில் அரிய சொற்பொழிவுகளும் நடைபெறும். இவையன்றி மாணவர்கள், சிற்சில வேளைகளில் சுயமாகவே நாடகங்களும்; சங்கீதக் கச்சேரிகளும் நடத்த ஆரம்பித்துவிடுவார்கள். இவ்வாறு பல வழிகளிலும் இந்தியர்களுக்குப் பெரிதும் பயன்படுவதால், இச்சங்கத்தில் எப்பொழுதும் கூட்டமும், குதூகலமுமாயிருக்கும். நெடுநாளாக இதன் அமைச்சராயிருந்துவந்த திரு. P. D. ரெங்கநாதம் போன்றவர்களின் ஊக்கத்தாலும், நன் முயற்சியாலும் இப்பொழுது லண்டனிலுள்ள ஏனைய மாணவர் சங்கங்களைவிட இதுவே தலை சிறந்து விளங்குகின்றது.

ஆனால் இச் சங்கத்தின் முக்கிய உபயோகம் மற்றொன்று உண்டு. அதாவது, புதிதாக இங்கிலாந்துக்கு வருபவர்களுக்கு இருக்க இடமும், தேசத்திற்குத் தகுந்தபடி நடக்கப் பழகிக்கொள்ள அவகாசமுமளிப்பதாகும். நம் நாட்டினருக்கும், மேல் நாட்டாருக்கும், நடையுடை பாவனைகளிலும், பழக்கவழக்கங்களிலும் அடிப்படையான வேறுபாடிருப்பதால், அவைகளில் முற்பழக்கமில்லாத நம்மில் பெரும்பாலருக்கும் அன்னிய நாடு சென்றவுடன் ஒருவித திகைப்பு ஏற்படுவது சகஜமே. இந்நிலைமையில் வெள்ளைக்காரர்களே நிறைந்துள்ள யாதேனுமொரு ஓட்டலில் போய் இறங்குவோமானால் நமக்கு பரம சங்கடமாயிருக்குமென்பதில் ஐயமில்லை. அதிலும் ஏனைய ஐரோப்பியரைக்காட்டிலும் ஆங்கிலேயர்கள் Etiquettee என்னும் நடைமுறைக் கட்டுப்பாடுகளைப் பெரிதும் மேற்கொண்டொழுகுகிறார்கள் இவர்கள் மத்தியில் வசிக்க நேரிடும்பொழுது, நாமும் ஆங்கிலேயரைப்போலவே பேசும்பொழுது உச்சரிக்கவும் (Pronunciation) சாப்பிடும்போது கத்தி, முள், கரண்டி முதலியவைகளை சரியாக உபயோ

இக்கவும் நேரத்திற்குத் தகுந்த உடையணிந்துகொள்ளவும் கற்றுக்கொள்ள இச்சங்கம் ஏதுவாயிருக்கிறது. கொஞ்சம் வயது முதிர்ந்தவர்களுக்கு இம்மாதிரியெல்லாம் திருத்திக்கொள்ளுதல் சிரமந்தான். ஆனால் மாணவர்களில் பலரும் நடையுடை பாவனைகளில் வெகு சீக்கிரத்தில் ஆங்கிலேயரைவிட ஒரு படி மேல் சென்றுவிடுகின்றனர்.

நம் நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, மேல்நாட்டு வாழ்க்கை பன்மடங்கு அதிகச் செலவுள்ளதாகவே யிருக்கிறது. சாதாரணமாக மாணவர்கள் நடுத்தர ஆங்கிலேய குடும்பங்களுடனே வசித்துவருகிறார்கள். இதனால் அவர்கள் படிப்புக்கு வசதி யேற்படுவதோடு, ஆங்கிலேய வாழ்க்கையின் நலன்களையும் தெரிந்துகொள்ளக்கூடுமென்று கருதப்படுகின்றது. இம்மாதிரி லண்டனில் வசிக்க ஒரு சிறு அறைக்கும் சாப்பாட்டுக்கும் மட்டும் குறைந்தது மாத மொன்றுக்கு பதினைந்து பவுண்கள் தேவையாயிருக்கின்றன. உயர்தர விடுதிகளில் அதிக சௌகரியமாயிருக்க வேண்டுமாயின் பவுண்கள் நூற்றுக்கணக்காக செலவாகும். பொதுவாகவே மேல்நாட்டார் அதிக செலவாளிகள்தான். பணத்தை சேமித்துவைத்து தமக்குப்பின் தம் மக்களுக்கு கொடுத்துவிட்டுப் போகவேண்டுமென்ற எண்ணமே அவர்களிடத்திலிருப்பதாகத் தோன்றவில்லை. சக்திக் கியன்றமட்டும் சம்பாதிப்பதும், அதை உயிருள்ளபொழுதே உண்டுடுத்திக் களித்துச் செலவிட்டுச் செல்வதுமே, அவர்களிற் பெரும்பாலரும் கண்ட மேலான தத்துவமாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் எவ்விதத்திலும் காசை வீணாக்குகிறார்களென்று சொல்லமுடியாது. கடையில் ஒரு சிறிய சாமான் வாங்குவதென்றாலும் அது உறுதியுள்ளதுதானா, விலை பெறுமா. இதே தரத்திலுள்ள சாமான்கள் என்னென்ன, எவ்விலையில் கிடைக்கக்கூடும் என்றெல்லாம் நுணுகி ஆராய்ந்து பார்த்தே வாங்குகின்றார்கள். சில நற்காரியங்களின் பொருட்டு அவர்கள் மிகத்தாராளமாய் செலவிட்டுள்ள பணத்தை அளவிடமுடியாது. தங்கள் மதத்தைப் பரவச் செய்வதற்கு மேல்நாட்டார் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்களென்பது,

நாம் கண்கூறிந்த தொன்றே. லண்டனிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளெல்லாம் சர்க்காரின் பொருளுதவியின்றி பொது ஜனங்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இவ் வைத்தியசாலைகளுக்கு, ரேடியம் என்னும் அரிய பொருளை சப்ளை செய்ய ஒரு பெருந்தொகை வேண்டியதிருக்கிற தென்று இளவரசரால் கேட்டுக் கொள்ளப்பட்ட 24 மணி நேரத்துக்குள், தேவைக்கு அதிகமான தொகை ஜனங்கள் தாமாகவே வலிய உதவினார்களென்றால் ஆங்கிலேயரின் பணச்செழிப்பையும் வெள்ளாண்மையையும் நாம் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

மேல் நாட்டாரின் சீரிய பொருளாதார நிலைமைக்கு அவர்களின் வியாபார முறையே காரணமாகும். Limited companies ஏற்படுத்தி மிக விரிவாக வியாபாரம் செய்து அதிக லாபம் அடையும் திறமை அவர்களிடத்திலேயே காணப்படுகின்றது. நம்மிடத்தில் நாணயமும் பரஸ்பர நம்பிக்கையும் குறைவாயிருப்பதினாலோ அன்றி வேறெக்காரணத்தினாலோ இத்தகைய முயற்சிகள் நம்மவர்களிடை இது காறும் சிறக்கவில்லை. மேல் நாட்டிலுள்ள பெரிய ஸ்டீமர் கம்பேனிகள் முதலாக ஓட்டல்கள், பத்திரிகைகள், ஷாப்புகள் ஆகிய எல்லாம் பல்லாயிரக் கணக்கான பங்காளிகள்கொண்ட கூட்டு வியாபாரங்களாகவே நடைபெற்று வருகின்றன. இவ்வழியிலேயே ஆங்கிலேயர்கள் தங்கள் கொடி பறக்காத நாடுகளிலுங்கூட தங்கள் வியாபார ஆதிக்கத்தை நிலை நிறுத்தியுள்ளார்களென்க. பொதுக் காரியங்கள் நடத்தும்பொழுது, ஒருவரின் சொந்த விருப்பு வெறுப்புக்களை தோற்றுவிக்காதிருத்தலும், பலதரப்பட்ட மனப்பான்மையுடையவருடனும் ஒத்துழைத்து காரிய சித்தி பெறுதலுமாகிய அரிய குணங்கள் ஆங்கிலேயர்களிடத்தில் விளங்கக் காண்கிறோம். வியாபாரத்திற்போல் அரசியலுள்ளிட்ட ஏனைய துறைகளிலும் இக்குணங்கள் அவர்களின் முன்னேற்றத்திற்கு பெருந்துணையாயிருக்கின்றன. இதற்கு நேர் விரோதமாக, நம்மிடையில் எங்கு பார்த்தாலும் கோளும், அழுக்காறும் பிணக்குகளும் தாண்டவமாடுவது மிகவும் விசனிக்கத்தக்கதாயிருக்கின்றது.

ஞாயிற்றுக்கிழமை ஒய்வு நாளாதலால், சகல வேலைகளும் நிறுத்தப்பட்டு ஜனங்கள் வீட்டிற்குள் ஒடுங்கி யிருப்பார்கள். வேதக்கோயில்களுக்குச் செல்லும் வழக்கமும் அறவே குறைந்து விட்டபடியால், தெருக்களில் ஜனப்பழக்கமும் சந்தடியுமின்றி, லண்டன்மாநகரம் வாரந்தோறும் பூர்ண ஹார்தால் அனுசரிப்பதேபோன்று தோன்றும். ஏனைய நாட்களிலோ, இடைவிடாது சென்றுகொண்டேயிருக்கும் மோட்டார் முதலிய வண்டிகளின் போக்குவரத்தும் ஜனங்களின் ஆர்ப்பாட்டமும் லண்டனில்போல் இவ்வுலகில் வேறெங்கும் காணமுடியாது. தெருவின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குச் செல்லவேண்டுமாயின், சில இடங்களில் பூமிக்குள் நடை பாதைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏனைய இடங்களில் போலீஸ்காரர் வண்டிப் போக்குவரத்தை நிறுத்தினபொழுதன்றி, உயிரோடு மறுபக்கம் போய்ச் சேர்வது துர்லபம். நாலா பக்கங்களிலும் சரமாரியாகச் செல்லும் பலவகைப்பட்ட வண்டிகளின் மத்தியில், தனித்த போலீஸ்காரன் ஒருவன் நின்றுகொண்டு அவையனைத்தையும் தன் கைச்சாடையினால் ஆட்டிவைக்கும் காட்சி அதிசயமான தொன்றே. பொது நலத்திற்காகவே ஏற்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடப்பதும் நடத்துவிப்பதும் அரசாங்கத்திற்கு மாத்திரமன்றி மக்கள் ஒவ்வொருவரையும் சார்ந்த பொறுப் பென்பதை மேல் நாட்டார் நன்குணர்ந்திருப்பதால்தான் இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் உயிர்ச்சேத முதலிய தொல்லைகள் அதிகமின்றி ஒருவாறு சமாளிக்க முடிகின்றது.

தொடரும்

சிததிரமான டெலிபோன்.

கெட்டிக் தங்கத்தால செய்யபபட்டு முதததுச சிபபியினுல பாபபாசரின் வீர முததிரையுடன சிததிர வேலைபபாடமைநத டெலிபோன் ஒனறு ரோமாபுரியிலுள்ள பாப்பாசருககுத தயாரிக கபபட்டிருககிறதாம.

முதலைககடவுள.

மலாககாவில் மீன பிடிதது்க கொண்டிருநத செம்படவனு ககு ஒரு முதலை அகபபட்டது. அதை அவன் மாாக்கட்டுக்கு விற்பதற்காகக கொணடு போனபோது ஒரு கிராமவாசி அதை விலை கொடுதது வாஙகி அதறகுப பூசை செயது வணஙகி அதன முதுகின மீது தட்டிக் கொடுதது அதை சமுததிரததிறகுள செல லுமபடி சைகை காட்டினுன். அதுவும அவவாறே போய விட்டது

டிககெட விறகும இயநதிரம்.

இப்போது ரயிலவே ஸடேஷனகளில டிககெட விறபதறகு குமாஸதாககள் இருபபதறகுப பதிலாக இயநதிரஙகளைக கணடு பிடிததிருககினறனா. அதை இஙகிலாநதில முதலில அனுபவித துப பாாப்பா. அநத இயநதிரததின் ஒரு பகுதியில் பணததைப போட்டால் அது டிககெட் கொடுப்பதோடு அவசியமானபோது சிலலரையையும் கொடுககிறதாம். இநத இயநதிரததை முடிக்க இரண்டு வருஷஙகள பிடித்ததாம

மேலும் கீழும் உள்ள வீடுகள

அமெரிக்காவில வாஷிங்டனில் 60, 70 மாடி'களுள்ள வீடு கட்டபபட்டிருககினறது ஜபபானில் 70, 80 மாடிகளுள்ள வீடு பூமியின கீழக கட்டபபட்டிருககினறதாம

எண்ணிககட்டி வைககும் கருவிகள.

இஙகிலாநதிலுள்ள இஙகிலாநது பாஙகியில மணிககு 1500 பவுன வீதம எணணிக கட்டி வைககும மினசாரக் கருவிகள 30 இருககின்றனவாம.

மீன தினபவர் தேசம

இஙகிலாந்தில மீன் தினபது நாளுககு நாள அதிகரிககிறது சென்ற ஆண்டில பதது லட்சம அநதா எடையுள்ள மீனை இஙகி

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41.

லத்து தேசத்தார் சாப்பிட்டிருக்கின்றனர். மீன் இன்னும் தேசத்தார் என்று அழைக்கக் கூடிய அவசியம் ஏற்பட்டு விட்டதாம்.

உலகில் பெரிய கப்பல்.

உலகிலேயே மிகப் பெரியதாகவும், அதிக வேகமாகச் செல்லக் கூடியதாகவும், அதிக சௌகரியங்களையுடையதாகவும் இருக்கக்கூடிய பெரிய கப்பல் ஒன்றைக் கட்ட லண்டனிலுள்ள கிளோடு பாங்கி கம்பேனியார் ஏற்பாடு செய்து வருகின்றனர். அதைக் கட்டி முடிக்க 60 லட்சம் பவுன் செலவாகுமென்றும் மூன்று வருஷங்கள் பிடிக்குமென்றும் தெரிகிறது. அது 75 ஆயிரம் டன் எடையுள்ளதாயிருக்குமாம்.

குழந்தைக்கு முத்தமிடும் பாம்பு.

சிலோன் அனுராதாவிரத்தில் மல்வத்தை ஒயா ஒழுங்கையிலுள்ள ஒரு செல்வர் வீட்டில் எழு மாதக் குழந்தை ஒன்று இருக்கிறதாம். பிரதி சோம வாரந்தோறும் அக்குழந்தை தொட்டிலிற் படுத்திருக்கும்போது ஒரு நாகம் பக்கத்தில் போய் படுத்துக்கொண்டு குழந்தைக்கு முத்தமிடுகிறதாம். அப்போது எவரேனும் சமீபத்தில் போனால் சீறி விழுகிறதாம்.

போலீஸாருக்கு மின்சாரக் குல்லாய்.

மின்சாரக் குல்லாய் என்பது அமெரிக்காவில் மரண தண்டனைக்கு ஆளாய கைதிகட்கே வழங்குவது இயல்பு. இம்மின்சாரக் குல்லாய்களைக் கைதிகட்குத் தரித்து, மின்சார சக்தியாற் பேரதிர்ச்சியை உடற் கூட்டிற்கு அளித்து இமைப் பொழுதில் அமெரிக்கர்கள் கொன்று விடுகின்றனர். இது ஜீவகாருண்யப் பேச்சில் உயிர் கவரும் நீதி முறையாகும்.

ஆனால், மின்சாரச் செய்திகள் கம்பிகளின் துணையில்லாமல் இப்போது அறியப்படுவதினால், அவசியமான காலங்களில் போலீசுத் தலைமைக்காரியாலயத்திலிருந்து மின்சார அபாய அறிவிப்பு அளிக்கப் பெற்றதும், இச்செய்திகளை போலீசுக்காரர்கள் தாங்கள் ஆங்காங்கு காவல் புரியா நின்ற நிலையிலேயே அக்கணமே உணர்ந்து கொள்ளும்படிக்கு மின்சாரக் குல்லாய்களை வண்டன் போலீசார்க்கு அளிக்க ஒருதிட்டம் செய்யப்பெற்றுள்ளது.